போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4542

திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 15—5—55 | இதழ் 45

களைந்தெறி கந்தலை!
அணிந்திடு புதுமையை!!

அறிக்கைகள் விடுக்கிறார், சங்கராச்சாரியார்.

பானகம்—வடை பருப்பு—காட்டி, மக்களை அழைக்கிறார், இராசகோபாலாச்சாரியார்.

ஜீயர்களும், தம்பிரான்களும் 'திருமுகம்' தீட்டுகிறார்கள்.

நாஸ்திகம் பரவுகிறதாம்! அதையழிக்க படையொன்றும் வேண்டுமாம்—குன்றக்குடி என்பார், ஈசனை நாடிடுமுன் தேடிடு சட்ட சபைப் படிகளை என்கிறார்.

கனல் கக்குவோர் பலர்! முப்புரம் எரித்தவன், ஏன் வரவில்லை இந்தப் பாபிகளை அழிக்க என்று பரதவிப்போரும், உண்டு.

பாவிகளே, என்கின்றனர், சிலர்.

ஏசல்! தூற்றல் பாணங்கள்! அரசுகூட துணைபோகிறது—ஆலயங்கள் தோறும், அர்ச்சனைகள்! அபிஷேகங்கள்!!

சுயமரியாதைக் கலியாணத்தைச் செல்லுபடியாக்க சட்டம் கொணர முடியாதென்கிறார், சுப்ரமணியம். தேரோட்டும் படையில், அவரும் ஒரு ஆள்!

'பெரியமனுஷன்,' என்பதற்கு அடையாளம்—நெற்றியிலே நீறு! பஞ்சகச்சம்! பழைமையைப் பற்றிப் பாசத்துடன் பேசுவது, என்றொரு பிரேமை!!

*

பலரகமான, ஆதரவுகள்! பல முனைகளிலிருந்தும், ஒன்று கூடிய, ஒரு முயற்சி.

இத்தனையும் தேவைப்படுகிறது, நம்மை அழிக்க.

ஒருவர் இருவரல்ல—யாரார், மதம், சம்பிரதாயம், பழைய பழக்க வழக்கங்கள் என்பவைகளின் மீது பற்றுதல் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறதோ அவர்கள் எல்லாம் கிளம்புகிறார்கள்.

'பற்றுதல் வைத்திருப்பது' என்பதைவிட பலன் பெறுவோர், என்பதுகூடப் பொருந்தும்.

சனாதனம் அழிகிறதாம்! சண்டாளர்களாம், நாம்!!

பழைய பழக்க வழக்கங்களுக்குப் பாடை கட்டுகிறோமாம்—எனவே, பதிதர்களாம்!

புதுமை யெனும் பெயரால், அது ஏன், இது ஏன் என்று கேட்டு, பகுத்தறிவு பேசுகிறோமாம்! எனவே, விஷயமறியாத இளைஞர்களாம்!!

வேதத்தின் உட்பொருள்—உபநிஷத்தின் கருப்பொருள்—முன்னோர் காட்டிய வழிகளில் கிடக்கும் அரும் பொருள், அறியா மாக்களாம், நாம்! 'பாராதீர் அவரை—பாபம்—பாபம்; என்று தலையிலடித்துக் கொள்ளும் தர்மாதிகாரிகளும்: இருக்கிறார்கள்!!

இவர்கள் யாவரும் கூடி-வைணவமானாலும், வைணவத்துக் குள்ளேயிருக்கும் இரண்டு பிரிவானாலும், சைவமானாலும், அசைவமானாலும், தமிழில் அர்ச்சனை விரும்பும் சாமிகளானாலும், சம்ஸ்கிருதமே சரியெனச் சொல்லும் கும்பலானாலும்—நம்மை எதிர்க்கும் விஷயத்தில் மட்டும், ஒரே நோக்குடன் இருக்கின்றனர்.

அம்மன்கோயிலில் 'அரையணா'வுக்கு சூடன் கொளுத்தும் பூசாரிமுதல், ஐந்து லட்சத்துக்கு வைரப் பொட்டு அணிந்திருக்கும் அம்மன் கோயில் தம்பிரான் வரை, சீறுகிறார்கள்!

ஏனெனில்' நாம் பழைமைகளைக்கண்டிக்கிறோம்—புதுமைகளைப் புகுத்த ஆசைப் படுகிறோம்.

"தீது! தீது!! சினிமா பார்த்தல் தீது!" என்றோர் விளம்பரம், ஈசன் சிவகாமி நேசனின் திருவடியைப் பெறத் துடிக்கும் முற்றும் துறந்த சன்னியாசியிடமிருந்து.

இல்லற சுகத்தில், எத்தனையுண்டோ அத்தனையையும் அனுபவிக்கும் அமைச்சர்கள் கூட,—தாளம் போடுகின்றனர், அவர்களுக்கு!

அமெரிக்காவுக்கு யோசனை சொல்லும், ஆச்சாரியாருக்கு சதா, இதுதான் வேலை! எங்கு சென்றாலும் இதுதான் முதற்பணி!!

இத்தனைக்கும் காரணம், நாம் பழைய கோட்பாடுகளை மீற ஆரம்பிக்கிறோமாம் — அவைகளைக் கண்டிக்கிறோமாம் — உலகத்தைக் காட்டி அதைப்போல நாமும் முன்னேற வேண்டுகிறோமாம்.

சுத்தானந்த பாரதி என்பவர் பாடுகிறார், "ஞானம் இருக்குது கிழக்கிலே! விஞ்ஞானம் இருக்குது மேற்கிலே!!" என்று — உலகம் முன்னேறுகிறது எனச் சொல்லும் கூற்றை மறுக்க, ஆதாரங்களுக்

அலைகிறார் டாக்டர் சி. பி, ராமசாமி அய்யர்! அமெரிக்காவுக்கு அடிக்கடி பறக்கும் அவரே, "விஞ்ஞானத்தில் மேனாடுகள் முன்னேறிவிட்டதென்பது உண்மை. ஆனால் அவை, மெய்ஞ்ஞானத்தில், நம்மளவுக்கு முன்னேறவில்லை. மெய்ஞ்ஞானம், நமக்குமட்டுமே சொந்தமானது" என்று தெளிவாகத் தேடுகிறார், ஆதாரங்களை.

அவ்வளவு, பசி, அந்த வட்டாரத்தில்! ஆத்திரம், காலாக்கினியாகி, அறிவைத் தகிப்பதால், நம்மை ஏசவும், அடக்கவும், நமது வாயை மூடவும், எல்லா வகையான முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

பத்திரிகைகளில், பலவிதமான பொய்ச் செய்திகள்! இம் முயற்சிகளுக்கு அவைகளின் பக்கபலம்!!

இத்தனையும், நம்மீது—பழைய பாதையைவிட்டு, புதுப்பாதை நோக்கிச் செல்லுங்கள்—என்று சொல்கிறோம், என்பதால்!!

அவர்களைப் பார்த்து. இதோ ஒருவர், கூறுகிறார்—கூறுவதைப் படியாமல் விடவேண்டாம், பக்தர்கள்—ஏனென்றால், கூறுபவர் தி. மு. க. ஆளல்ல என்பதையும் தெரிவித்துவிடுகிறோம், முன்கூட்டியே.

ஒரு குழந்தை வளர்ச்சி அடைந்து வரும்போது, அதன் பழைய சட்டைகள் சின்னதாகி விடுகின்றன. புது சட்டைகளைத்தான் போடவேண்டும். இதுபோலத்தான் சமூகம் வளர்ச்சி அடையும்போது பழைய கந்தல் துணிகளைத் தள்ளிவிட்டு, புதிய ஆடைகளைப் போர்த்தவேண்டும்.

*

உலகம் பிரமாதமாக முன்னேறிவிட்டது. ஆனால், மக்களின் மனம் இன்னும் பழைய பத்தாம் பசலி வாழ்க்கையிலேயே வாழ்ந்து வருகிறது. பல நூற்றாண்டுகளுக்குமுன் இருந்து வந்த ஆனால் தற்கால நிலைக்கு கொஞ்சங்கூடப் பொருந்தாத விஷயங்களைப் பலர் போற்றிவருகிறார்கள்.

*

மனுவிலிருந்தும், யாக்ஞவல்யரிடமிருந்தும் சாஸ்திர ஆதாரங்களை எடுத்துக்காட்டி, பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்ட இந்து சட்டத் திருத்த மசோதாவை எதிர்க்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்குமுன் 'மனுவும், யாக்ஞவல்கியரும் சொன்ன அல்லது எழுதியவைகளை நான் பெரிதும் மதிக்கிறேன். ஆனால், தற்கால நிலைமைக்கு அவர்களது யோசனைகள் எப்படிப் பொருந்தும் என்பது எனக்குப் புரியவில்லை.

*

கடந்த 2000 ஆண்டுகளில் இந்தியா மகத்தான மாறுதல்களை அடைந்திருக்கிறது. மனு இருந்த காலத்தில் இந்தியாவின் மக்கள் இரண்டரை கோடி. இப்போதோ, 37 கோடி. எவ்வளவோ வளர்ந்திருக்கிறோமே! இப்போதும் அதே சட்டங்களைக் கொண்டாடவேண்டுமெனச் சொல்வது சரியா?

*

தெளிவாகக் கேட்கிறார்! இப்படித்தான் நாமும் முப்பது ஆண்டு காலமாக இந்த நாட்டில் கேட்டு வருகிறோம்!! கேள்வி, வாலிபர்களின் இதய நாடிகளையெல்லாம் தடவி, 'புதுமைப் பாதை'யில் செல்லும் ஆர்வத்தை எண்ணற்றவர்களிடம் உண்டாக்கியிருக்கிறது.

இந்த ஆர்வம் இப்போது அணை கடந்து போகுமளவுக்கு ஏராளமான இளைஞர்கள்! எண்ணற்றோர்! எத்திசையும் கழகமணம்!

இதனால்தான், எதிர்ப்புகள் பல ரூபத்தில், பல ரகத்தில் உருவாகியுள்ளன. அரசாங்க அமைச்சர்களிலிருந்து, ஆதி அனுதியைத் தேடிடும் அடியார்கள்வரை ஒன்றுகூடி, நம்மை அழிக்கச் சங்கநாதம் செய்கின்றனர்.

அப்படிச் சங்கொலி எழுப்பும் சனாதனிகளைப் பார்த்தால், எரிச்சலைவிட, நகைச்சுவையே அதிகமாகிறது.

தம்பிரான், அதோ! இடையில் அணிந்திருப்பது, புலித்தோலாடையல்ல—அர்வந்த் மில்லிலோ, காலிகோ மில்லிலோ தயாரான, அவ்வளவு நைசான உடை. கலர் மட்டும் காவி. அவர் கூறும் மனு காலம், மில் என்றால் எதுவென்று அறியாத காலம்!

அடிகள் பறக்கிறார், காரில்! அம்மையப்பன் காட்சியளித்ததாகச் சொல்லப்படும் காலத்திலே அப்பரும் மணிவாசகரும் இருந்ததாகச் சொல்லப்படும் காலத்திலே, காரைக் கண்டார் கிடையாது.

ஆச்சாரியார் அழகுறப் பேசுகிறார், அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் உள்ள தாரதம்யங்களைப் பற்றி, மெதுவான குரலில், பேசுகிறார்! நாலு மூலைக்கும் கேட்கக்கூடிய அளவுக்கு, அலறுகிறது ஒலிபெருக்கி! சக்கரவர்த்தித் திருமகன் காலத்தில், இல்லாத புதுமை இது.

இப்படி புதுமை அளித்த எல்லா வசதிகளையும் அனுபவித்தபடியே, புதுமைகள் அரும்பப் பாடுபடும் கொள்கையாளர்கள் மீது பாய்கிறார்கள், இவர்கள்.

அதைத்தான், அவ்வளவு அருமையாக எடுத்துக் காட்டுகிறார், அவர். பழைய கந்தலை வீசிவிட்டு, புதிய சட்டைகள் போட்டுக்கொள்ளுங்கள் என்று! அவர், தி. மு. க. அல்ல. நமது ஆதீனத்தம்பிரானால், 'செங்கோல்' பரிசு பெற்றவர்—ஆச்சாரியாரின் அத்யந்த சகா—இந்த நாட்டில் வாழும் மக்கள் எல்லோரது, கவனத்தையும் கவருமள

"கெட்ட மே தினம்"

இரும்பெடுத்தல், உருக்குதல், கட்டிடங்கள் கட்டுதல், உப்பு காய்ச்சுதல்—இவைமட்டுமே, இங்கிலாந்தின் தொழில்களாக இருந்த காலம் ஒன்றுண்டு! பிறகே, ஆட்டு ரோமத்தைக் கொண்டு கம்பளமும், பருத்திநூலைக் கொண்டு துணியும் செய்யும் தொழில் உருவாயிற்று. பதினோராம் நூற்றாண்டிலிருந்து பதினாறும் நூற்றாண்டுக்குள் கைத்தறித் தொழிலில், தேர்ச்சிபெற்ற பிரெஞ்சுக்காரர்கள், நுழைந்தனர்—தெரிந்த தொழிலைச் செய்து, பிழைக்கலாம் என்ற கருத்துடன், திறமையும், வேலை செய்யும் வழிவகைகளும் அவர்களுக்குத் தெரியுமாதலால், இங்கிலாந்தில் அவர்களுக்கு இடம் தரப்பட்டது. குவிந்தார்கள்! குவிந்துகொண்டேயிருந்தார்கள்! அவர்களது வரவைக் கண்ட, இங்கிலாந்தின் தறியாளர்கள் அஞ்சினார்கள்—தங்கள் பிழைப்புக்கே ஆபத்து ஏற்பட்டுவிடுமோவெனப் பயந்தார்கள். அப்படி ஏற்பட்ட பகைமையின் காரணமாக அந்நிய நாட்டு தறியாளர்களையெல்லாம் தாக்க ஆரம்பித்தார்கள்! பெரிய கலவரம் ஏற்பட்டது, இலண்டன் மாநகரில்! பிரெஞ்சுத் தறியாளர்களின் குடிசைகள் இடிக்கப்பட்டன—தறிகள் தவிடுபொடியாக்கப்பட்டன — பலர் வெட்டி வீழ்த்தவும் பட்டனர். இந்தச் சம்பவம் 1517 மே மாதம் நடைபெற்றதால், அந்த நிகழ்ச்சி நடைபெற்ற தினத்தை, 'கெட்ட மே தினம்,' என்று தொழில் வளர்ச்சிச் சரிதம் சொல்லுகிறது,

வுக்கு 'வளர்ந்திருப்பவர் — பண்டித ஜவகர்லால் நேரு தான் கடந்த மே முதல் நாளன்று டில்லியில் பேசிய பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார், இவ்விதம்.

உலகம் பிரமாதமாக முன்னேறி விட்டது!—என்று கூவுகிறார்.

நாம் மட்டும் பத்தாம் பசலிகளாகவே யிருந்தால் போதுமா — என்று கேட்கிறார்.

கந்தலைக் களைந்தெறி! புத்தாடை அணியுங்கள்! — என்று அழைக்கிறார், அனைவரையும்.

இந்த அழைப்பில், பொதிந்திருக்கும் உண்மைகளை, 'ஒன்று கூடி நம்மை எதிர்க்க,' படை திரட்டும் பக்தர்கள் அறியவேண்டும்.

காலம் மாறிவிட்டது! கருத்துக்களும் மாறவேண்டும்!—என்கிறோம்.

இது, நாஸ்தீகமாம்! கடவுளைக் காயும் கயவர்களாம், நாம்!

உலகம் அணுசக்தியைப் பற்றி ஆராய்கிறது — இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குமுன், இங்கிலாந்தும் ஏரும் கலப்பையும் ஏந்தியிருந்த பூமி! அமெரிக்கா, மனித வாடைகளே இல்லாமலிருந்த இருட்கண்டம்! அங்கெல்லாம், இன்று விஞ்ஞானம் விசித்திரமான உண்மைகளைக் கண்டுபிடித்துவிட்டது. இங்கிலாந்திலிருப்போருர், 'இழை நக்கி நூல் நெருடும்' தறியாளர்களாகயிருந்தார்கள், ஒரு சமயம். ஆனால், அந்தக் கட்டம் தாண்டி, நீராவியால் இயக்கவும், நிலக்கரியால் இயந்திரங்களை ஓட்டவும், மின்சார சக்தியைக் கண்டுபிடித்து அதை உபயோகிக்கவுமாக வளர்ந்துவிட்டார்கள் முன்னூறு ஆண்டுகளில்! நாமுந்தான் இருக்கிறோம் — தறி, இன்னும் இருக்கிறது, எங்கும். ஏரும் கலப்பையும்தான், இங்கே இன்னும். மனுவும் மாந்தாதாவும் ஏடுகளை எழுதிய காலத்தில்,என்ன நிலையோ, அதே நிலைதான்.

பழமையை விரட்டி புதுமைகளுக்கு இடமளியுங்கள், என்றால் —தம்பிரான்களும், சங்கராச்சாரிகளும், அரசியல் மேதைகளும்—ஏன்?—அரச மந்திரிகளும் கூட, கூட்டுச் சேர்ந்து கூவிக்கொண்டு கிளம்புகிறார்கள்.

"மாரியாத்தா! வந்திருக்கா என் மகனிடம். வைத்தியர் கிட்டேப் போனா, அவளுக்குக் கோபம் வந்துடும்!!

கிராமத்து முனியம்மா, இன்னும் கூறுகிறாள், இப்படி! முனியம்மா, படிப்பு அற்றவள்—பழமையின் நெடி இன்னும் அவளை விட்டுப் போகவில்லை. சுகாதார இன்ஸ்பெக்டர் சுப்ரமணிய அய்யர், முனியம்மா கூறுவதைக்கேட்கும்போது, கிண்டல் செய்துவிட்டு அம்மை குத்தும் பெட்டியைத் திறந்து அம்மைகுத்தாமல் விடுவதில்லை!! அப்படிச் செய்யும், சுப்ரமணிய அய்யர், வீட்டுக்கு வந்ததும், நடத்தும் ஜபதங்களைப் பார்த்தால்—இவரா! முனியம்மாவை கிண்டல் செய்தார் என எண்ணத் தோன்றும். இதுபோன்ற சுப்ரமணியர்கள், ஏராளம்! வெள்ளையன் செய்துதந்த காரில் ஏறிச்சென்று விழா வொன்றில் கலந்து கொண்டாராம், நமது ஆச்சாரியார். அங்கே, பேசினாராம், க்ஷயம் வருமுன் தடுப்பதற்காகப் போடப்படும் பி. சி. ஜி. ஊசிபோடும் முறையில் தனக்கு நம்பிக்கை கிடையாதென்றும், இப்படி அந்நியரின் கண்டுபிடிப்புகளுக்குப் பதில், நமது பழைய முறைகளின்படி சிகிச்சை செய்வதே சிறந்தது எனத்தான் நம்புவதாகவும். விழாவுக்கு வந்திருந்த அமைச்சர் ஷெட்டி, ஆச்சாரியார் கூற்றினை மறுத்திருக்கிறார்!!

புதுமைகள் என்பதால்—அவை பழைய சம்பிரதாயங்களுக்கு மாறுபட்டது என்பதால் — மறுக்கும் சுபாவமும், ஏற்றுக்கொள்ள முடியாத இயல்பும், படித்தோரில் பலருக்கும் உண்டாகிறது. பழமைகளைக் காத்தால்தான் ஈஸ்வரபக்தியும், மதநம்பிக்கையும் நசிக்காது என நம்புகிறார்கள்! புதுமைச் சாதனங்களை அனுபவித்த வண்ணமே, இதனைக் கூறவும் செய்கிறார்கள்!!

அதோடு, நம்மைப்போன்ற அறிவியக்கவாதிகளையும் எதிர்க்க, கூட்டுமுயற்சி செய்தவண்ணம் கொக்கரிக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்துத்தான், அன்பர் நேரு சொல்கிறார், "மனுவும் யாக்ஞவல்யரும் வேத விதிகளைத் தீட்டியது, 2000 ஆண்டுகளுக்கு முன்பு, அப்போது இரண்டரை கோடி மக்கள்தான் இந்தியா முழுமையும் இருந்தனர். இப்போதோ 37 கோடி பேர் இருக்கிறார்கள். இதைக் கவனத்தில் வைக்கவேண்டும்" என்கிறார்,

பழைய ஏடுகளையும் சாஸ்திரங்களையும் நம்பிக்கொண்டு இருக்கக் கூடாது — வளரும் குழந்தைக்கு சட்டைகளை மாற்றுவதுபோல், காலத்துக்கேற்ற புதுமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் — எனத் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

இதே கருத்தை, ஒருநாளல்ல, ஆண்டு முழுமையும்; ஒரு இடத்திலல்ல, நாடு முழுமையும்; ஒருவர் இருவரல்ல, எண்ணற்றவர்கள்; சொல்லிக்கொண்டிருக்கிறோம், நமது கழகமூலம்.

நம்மை அழிக்கவேண்டுமாம்—ஆஸ்திகமெனும் போர்வையில், படைகள் திரட்டப்படுகின்றன. ஏச்சும் பேச்சும் அள்ளியிறைக்கப்படுகிறது.

சங்கராச்சாரி, அறிக்கைகள். விடுக்கிறார், பத்திரிகைகளில்.

ஆச்சாரியார், 'அதுவே என் பணி' என்று அனுதினமும் தெரிவிக்கிறார்.

குன்றக்குடி, குமுறுகிறார் தமிழ் மொழியில்.

'களம்', அமைக்கும் முயற்சி, அதி தீவிரமாக, அரசமரத்தடி முதல் அரசுக் கட்டில் வரை செய்யப்படுகிறது.

ஆண்டவனை அழிப்போர் நாம்—என்று, யாரார் கிடைக்கிறார்களோ, அவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு கூச்சல் எழுப்பப்படுகிறது! "வேத விதிகளை அனுசரிப்பதால், புதுமைகளை ஒழித்துவிடலாம், ஒவ்வொருவரும் நமது புராதன பழக்கவழக்கங்களை விடாதீர்," என்று அசரீரி மூலமாக அல்ல. பத்திரிகைகள் மூலம், விளம்பரங்கள் செய்யப்படுகிறது.

இந்த வேலைக்காக, தம்பிரான்களும், மிட்டா மிராசுகளும் தமது வருமானத்தில் ஒரு பகுதியையும் ஒதுக்கித்தர முன்வருகிறார்கள்.

அவர்களனைவரையும் பார்த்துத்தான் சொல்கிறார் பண்டிதர் — "பழைய சட்டை! பெரிய குழந்தைக்குப் பயன்படாது. உணருங்கள்," என்று.

நாம் சொன்னால், கோபக்கனலுடன் பார்க்கும் கூட்டத்தாருக்கு—அவரது மொழிகளை வைக்கிறோம். எண்ணிப்பாருங்கள்,ஏற்றவழி எதுவெனத் தீர்மானியுங்கள்.

★

திராவிடநாடு

காஞ்சி] 15—5—55 [ஞாயிறு

ஆச்சாரியார் - கண்டிக்கிறார்!

—[]—

கடிதக் கணைகளை வெளியிட்ட வண்ணம் இருக்கிறது, 'இந்து'.

தலையங்கம் தீட்டுகிறார், 'தினமணி'யார்.

ஆபத்துக்களை அள்ளித் தருகிறது, 'சுதேச மித்திரன்'.

நாட்டிலுள்ள காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பு.

காமராஜரும் வாய்திறந்து, கண்டிக்கிறார், அப்போக்கை.

தேபர், விளக்கம் தர முன்வருகிறார்—காங்கிரஸ் சார்பில்.

கிருஷ்ணமேனனைப் பேட்டி கண்டு அவரும் ஆதரவளிப்பதாக வெளியிடுகின்றனர், நிருபர்கள்.

*

"அவரா இப்படியொரு அறிக்கையை விட்டார்? அவரா! அதிசயமாயிருக்கிறதே! நாம், கூறிடும் ஆதாரங்களைவிட, ஆணித்திறமான வகையில் அல்லவோ, கூறிக் கண்டிக்கிறாராம்."

"ஆமய்யா, ஆம்! கண்டனமென்றால், சாதாரணமானதல்ல. வட இந்தியத் தலைவர்களால்,மறுக்கவே முடியாத, விளக்கங்களோடு. என்ன இருந்தாலும், இத்தனை நாளும், அவர்களோடு பழகியவர் இவ்வளவு தூரம் கணைகளைச் சொரிகிறார் என்றால், என்ன மறுப்புக்கூற இயலும்? அவர்கள், வாயையே மூடி விட்டாரே!"

"நாம் இருக்கிறோம்—கேலி செய்வோம் என்பதைக்கூடச் சிந்திக்காது இப்படியெல்லாம் கிண்டல் செய்திருக்கிறாரே, இந்தியை."

"நாம் இருப்பதைப்பற்றி நினையாதவரல்ல—அவருக்கு சதா, நம்முடைய ஞாபகம்தான். ஆயினும், கண்டித்தாகவேண்டும், இல்லையென்றால் இடையூறு ஏற்படும் என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதனால் முந்திக்கொண்டுவிட்டார்."

"என்ன நிலைமையோ......?"

"என்ன நிலைமையா, டில்லி சர்க்காரின் இலாகாக்களில் உத்யோகத்துக்குப் போகவேண்டுமானால், இந்தி அவசியம் தெரிந்திருக்க வேண்டுமாமே—அந்த மொழியில் தானே பரீட்சைகள் எழுதவேண்டுமாம் — இந்த முறை அமுலுக்கு வந்துவிட்டால், பிறகு நம்மைப் போன்றவர்களால் சிறு உத்யோகமாவது பெறமுடியுமா! அதனால் தான் அவர், அவ்வளவு ஆத்திரமடைந்து கண்டிக்கிறார்."

*

நாடு, பேசுகிறது, 'கல்கி' இதழ் மூலம், இந்தி மொழிமீது ஆச்சாரியார் வீசிய, தாக்குதலைக் கண்டு.

அண்ணனைக் கொல்ல இராமனிடம் சென்ற விபிடணன், வாளை உருவிக்கொண்டு இலட்சுமணனைத் தாக்க ஆரம்பித்திருந்தால், அது எவ்வளவு ஆச்சரியத்தை உண்டாக்குமோ—அவ்வளவு ஆச்சரியம்!

இந்தியினைப்பற்றி யாராரோ, கண்டன மாரிகளைப் பொழிந்தார்கள்—18 ஆண்டுகளுக்கு முன்பே நாம் கண்டித்தோம், இலாயக்கற்ற மொழியென்று—எனினும் ஆச்சாரியார் கண்டிக்கிறார் எனும்போது, ஆச்சரியமும் திகைப்பும் உருவாகிறது.

ஆச்சாரியார் கண்டிக்கிறார் என்று அறிந்ததும், 'இந்து' 'மித்திரன்' 'தினமணி' முதலிய எல்லா ஏடுகளும், வார இதழ்களும், தீட்டி முழக்குகின்றன.

இத்தனை நாட்களும், இப்படி எதிர்த்தோரை, ஏசிய ஏடுகள்! தீட்டுகின்றன, விளக்கி! விளக்கி!!

எனவேதான் ஆச்சரியமேற்படுகிறது, பலருக்கும்—இந்த எதிர்ப்பில் அடங்கியிருக்கும் சூழ்ச்சி ஏதோ, என்று சந்தேகம் கொள்வோரும் நமக்குத் தெரிகிறார்கள்—உத்யோக வேட்டையில் ஈடுபட்ட வகுப்பாயிற்றே, அதற்கு ஆபத்து வருவதைக் கண்டதும் ஆச்சாரியார் எதிர்ப்பாளராகிவிட்டாரோ, என்றும் எண்ணுகின்றனர்.

நாம், நம்புகிறோம்—ஆச்சாரியார், தெளிவுபெற்றே தீட்டியிருக்க வேண்டும் அந்தக் கண்டனத்தை, உள்ளத் தூய்மையோடு, உண்மைகளை உரைக்க முன் வந்திருக்கிறார் என்றே நம்புகிறோம்.

தாலமுத்து! நடராசா!—நீங்கள் பெற்றுவிட்டீர்கள் வெற்றி—என்று கூவிப் பெருமை கொள்கிறோம்,

சிறைக்களம் சென்றனரே ஈசல்களைப்போல, செந்தமிழ் காக்க! அந்தச் சிறப்புறு தமிழ் வீரர்களாம், ஆயிரத்து ஐந்நூறு பேருடைய தீரமும் வீரமும் இறுதி வெற்றி அடைந்த காட்சி இதோ—என்று தமிழகத்துக்கு அறைகூவிச் சொல்லுகிறோம்.

தலைவர் பெரியாரோடு, பெல்லாரி சிறையில் படாத பாடுபட்ட திராவிட வீரர்காள்!—மறக்குடியின் வீரம் நிலை நாட்டப் பட்டுவிட்டதென, மார்தட்டிச் சொல்லுகிறோம்.

மானங்காத்த மாதர்களே! குழந்தைச் செல்வங்களோடு, சிறைக்களம் சென்ற தமிழ்த் தாய்மார்களே!! உங்களது தியாகம் வீண்போகவில்லை, என்று உரத்துக்கூறி, உவகை கொள்ளுகிறோம்.

கர்ப்பிணி தனலட்சுமி பட்டபாடு! தடியடிக்கும், வேதனைக்கும் ஆளாகிய நமது தோழர்கள்! குடந்தை வீதியில் ஓடிய குருதிவெள்ளம்! — எதுவும் வீண்போகவில்லை-இதோ, இப்போதாவது, ஆச்சாரியாரின் கண்களைத் திறந்து விட்டிருக்கிறது காண அகமகிழ்கிறோம்.

1955—ஆச்சாரியார், சொல்லுகிறார், "இந்தியை முதலில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்கள்" என்று.

1937—ஆச்சாரியார், இப்படிச் சொல்லியிருந்தால், அவர் இன்று அஞ்ஞாதவாசம் செய்யும் கதி நேர்ந்திருக்காது! மாசு பூசிய மேனியராய், மனம் புழுங்கி, வயோதிகக் காலத்தைக் கழிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது!! ஒரு மாபெரும் இளைஞர் படையின், பாராட்டுடன் பவனி, வந்திருக்கலாம்.

இழந்தார், அப்பேற்றை! இப்போது சொல்லுகிறார்!!

"இந்தியை, அவசரமாகத் திணிப்பவர்களை 'வெறியர்கள்" என்று அழைக்கிறார், ஆச்சாரியார். இதே வெறிமட்டும் 1937 ஆச்சாரியாரிடம் இல்லாமலிருந்தால், ஓமான் கடலுக்கு இரையான பன்னீர் செல்வம் கண்ணீர் சிந்தியிருக்கமாட்டார் சட்டசபையில்! பன்னீரால் நனைத்திருப்பார், ஆச்சாரியாரை!!

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை! எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!!" என்று சிந்து பாடிய வண்ணம், சென்றதீரர்காள்—

(15-ம் பக்கம் பார்க்க)

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

தனிமனிதனின் பொருளீட்டும் முயற்சிகளில் அரசாங்கம் தலையிடுவது தவறுஎன்ற கொள்கையைத் தங்களுக்கு ஆதாரமாகக் கொண்டு தொழிலாளரைத் தமது விருப்பம் போல் சுரண்டித் தங்கள் இலாபத்தைப் பெருக்க முயற்சித்தனர் முதலாளிகள்.

பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக நாட்டில் உண்டாகிய இப்புதுப் பிரச்சனைகளைத் தீர்க்க அரசாங்கம் முன் வரவில்லை. அரசாங்கமும் தலையிடாக் கொள்கையை ஆதரித்தது. முதலாளிகளும் அதற்குப் பக்கபலமாக இருந்தனர்.

அரசாங்கம் தங்கள் துன்பங்களைப் போக்க முயற்சிக்காததைக் கண்டு, தொழிலாளர்கள் தங்களுக்குள் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு, தங்கள்கூட்டுப்பலத்தால் முதலாளிகளைப் பணிய வைத்தனர். ஆனால் அரசாங்கம் இச்சங்கச்கள் சட்ட விரோதமானவை என்று பிரகடனம் செய்தது. ஆகவே தொழிலாளரெல்லாம்—அவர்கள் தான் நாட்டுமக்களின் பெரும்பகுதியினர்—அரசாங்கத்தாலும் காப்பாற்றப்படாமல் தாங்களும் தங்களைத்தானே காப்பாற்றிக் கொள்ளவும் விடப்படாமல் சொல்லொணுக் கஷ்டமனுமவித்தனர்.

சங்கம் நிறுவும் உரிமை, கூலி உயர்வுக்கான போராட்டம் செய்யும் சுதந்தரம் இவைகளை—அரசாங்கம் கொடுக்காததனுல்—அந்த அரசாங்கம் சீமான்களின் கையில் இருந்ததால்—தொழிலாளருக்கும் வாக்குரிமை கொடுக்க வேண்டும், தொழிலாளர் தலைவர்களும் பிரதிநிதிகளும் காமன்ஸ் சபையான மக்கட் சபையில் அமர வேண்டும் என்பதற்காக கிளர்ச்சிகள் தோன்றின.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் அரசியல் சீர்திருத்தத்துக்கு அடிகோலின.

தொழிலாளருக்கு ஆட்சியில் பங்கும் பொறுப்பும் வேண்டும் என்ற கிளர்ச்சியை ஆதரித்தவர்கள் "யுட்டிலிட்டேரியன்" என்ற அரசியல் கருத்தை வெளியிட்டவர்கள். நாட்டின் நிலைக்கேற்ப, மக்களின் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு அரசியலில் சீர்திருத்தம் தேவை என்பதே அவர்களது கொள்கை.

'பயன்'கருதி அரசாங்கங்கள்நடைபெற வேண்டும் என்ருர்கள் இவர்கள். பயன்என்று சொல்லும்போது பெரும்பான்மையான மக்களின் இன்பத்தைத்தான் குறித்தார்கள். மனிதரின் இன்பம் எதுவோ, அதைத் தரக்கூடியது எதுவோ அவைகளடங்கிய பொதுநலனே 'பயன்' என்ருர்கள். மக்களின் வாழ்க்கை, அவர்களின் நடவடிக்கைகள், அவர்களுடைய சுகவாழ்வு இவைகளைப் பற்றியே யுட்டிலிட்டேரியன்கள் ஆராய்ந்தார்கள்.

பெந்தாம் 1748—1832

இவர்களில் முதன்மையானவர் ஜெரமிபெந்தாம்என்பவர். பழைமையைப்பற்றிக் கவலை கொள்ளாதவர் அவர். ஒரு ஸ்தாபனம் பலகாலமாக இருந்து வந்திருக்கிறதென்ருல், அதனுல் அது புனிதமடைந்து விடுவதில்லை. அதை மாற்றவோ அழிக்கவோ செய்யலாம். ஒரு நாட்டின் சட்டங்களும் அரசியல் ஸ்தாபனங்களும் அந்தந்தக் காலத் தேவைகளுக்கேற்ப இயங்க வேண்டும். அவைகள் எவ்வளவு காலத்தவை?—என்பதல்ல. அவைகளால் யாது பயன்?—என்பதே முக்கியம் என்ருர்.

ஒவ்வொரு மனிதனும் இருவித உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கிருன். அவை வேதனை, மகிழ்ச்சி என்பவை. இவைகளின் மூலம் நல்லது கெட்டது எவை என்று கண்டுபிடிக்கிருன். 'பயன்' கொள்கையானது இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, எந்தெந்தக் காரியம் மக்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கிறதோ அது நல்லதென்றும், எதெது அம் மகிழ்ச்சியைக் குறைக்கச் செய்கிறதோ அது கெடுதலானதென்றும் நிர்ணயிக்கிறது. நன்மை, சாதகம், மகிழ்ச்சி, இன்பம் இவைகளை எந்தக் காரியம் தருகிறதோ அது பயனுள்ளது. இன்பம் என்பது மகிழ்ச்சி தரக்கூடிய எதையும் குறிக்கும். அல்லது வேதனையில்லாததைக் குறிக்கும். நல்லொழுக்கத்தால் வரும் இன்பத்தைப் போலவே, சட்டம் செய்வதன் மூலமும் இன்பத்தைபெருக்கலாம்.சமூகத்திலிருக்கும் எல்லோரும்—ஒருவரையும் புறக்கணியாமல்—இன்பம் பயக்கக்கூடிய விதத்தில் சட்டம் செய்யவேண்டும். அரசியல் ஸ்தாபனங்களில் எல்லோருக்கும் பங்கு இருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். என்று அவர் விரும்பினுர்.

ஒப்பந்தத்தால் ஏற்பட்டதல்ல அரசு. ஏன் மனிதன் அரசாங்கத்துக்குப் பணிந்து நடக்கிருனென்ருல், எப்பொழுதோ அவன் மூதாதையர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக அல்ல—இப்பொழுது, அந்த அரசாங்கத்தால் தனக்குக் கிடைக்கும் பயனை உத்தேசித்து. இன்பத்தைப் பெருக்குகின்றன, பயனுள்ளவையாயிருக்கின்றன—அதனுலேயே அரசாங்கங்கள் இருக்கமுடிகிறது. அவ்வைகளுக்கு அடங்கி நடப்பதனுல் ஏற்படும் சிரமங்களைவிட, அடங்காமலிருந்தால் ஏற்படக்கூடிய இன்னல்கள் அதிகம். அதனுல், பயனிலிருந்து பிறந்த பழக்கமே அரசாங்கத்தின் அடிப்படை—ஒப்பந்தமல்ல என்ருர், பெந்தாம்.

சட்டம் என்பது மக்களின் ஒன்றுபட்ட குரல். கடவுளுக்கும் மக்களுக்கும்தான் சட்டம் செய்ய முடியும். இயற்கைக்கு முடியாது, அதனுல்தான், தெய்வீகச் சட்டம், மக்கட் சட்டம் என்று இருவகைகள் உண்டு. இயற்கைச் சட்டங்கள் கிடையாது. கடவுட் சட்டம் எதுவென்று கண்டு பிடிப்பது கடினம். அதனுலேயே மக்கட் சமூகங்களில் சட்டம் செய்வதற்கும், சர்வ அதிகாரம் வகிப்பதற்கும் ஒரு அதிகாரி தேவை. பாதுகாப்பளிப்பது, செல்வத்தைப் பெருக்குவது, சமத்துவத்தை நிலைநிறுத்துவது; இவைகளே சட்டத்தின் நோக்கங்கள். எல்லோரும் சட்டத்துக்கு அடங்கி நடந்தால் தான், சட்டம் நிரந்தரமாயிருக்கும்,

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 15—5—55 ஞாயிறு காலை 10-மணிக்கு பூந்தமல்லி கண்டோன்மெண்ட் குமணன் சாவடி, செட்டித்தெருவில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுகிறேன். மாநிலமாநாட்டு நிதி வசூல் செய்யும் வழிவகைகள் பற்றியும், மாவட்டத்தில் நடைபெற வேண்டிய கழகப் பணிகள் குறித்தும் ஆராயப்படும்.

K. T. S. மணி,
செ. மா. தி. மு. க. செயலாளர்.

பயனுள்ளதாயிருக்கும், இன்பத்தைப் பெருக்கும்.

அரசின் சர்வ அதிகாரம்—அது மக்களிடமிருந்தாலும் மன்னனிடமிருந்தாலும் கட்டுக்கடங்காத வல்லமையுடையது—மக்கள் எதிர்ப்பார்கள் என்ற பயத்தைத் தவிர அதன் அதிகாரத்துக்கு வரம்பு கிடையாது.

மக்களுக்கு, அரசாங்கத்தை—அதாவது அரசின் சர்வ அதிகாரத்தின் கருவியை—எதிர்க்க உரிமையில்லை என்றார் பெந்தாம். ஆனால், எதிர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் எதிர்க்காததால் அனுபவிக்கும் தீமைகளைவிட அதிகமாயிருந்தால் அரசாங்கத்தை எதிர்க்கலாம் என்றார்.

அரசாங்கம் கொடுக்கும் தண்டனைகளைப் பற்றிப் பேசும்போது, அவைகளால் பயன் ஏற்படுமா என்று பார்க்கவேண்டும் என்றார் பெந்தாம். குற்றவாளிகளைத் தண்டிப்பதைவிட — அதிலும் கடுமையாகத் தண்டிப்பதைக் காட்டிலும்—அவர்களைத் திருத்த முயற்சிப்பதே சிறந்தது என்றார்.

அரசியல் அமைப்பு எழுதப்பட்டிருந்தால் பாதுகாப்பாயிருக்கும். ஆனால் இந்த எழுதப்பட்ட அரசியல் சட்டங்கள் அரசாங்கம் வேண்டும்போது திருத்தவும் சுலபமாயிருக்க வேண்டும்.

இங்கிலாந்தில் வாக்குச் சீட்டு முறையில் சீர்திருத்தம், வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்தல் போன்ற சீர்திருத்தங்கள் தேவை என்று பெந்தாம் வாதாடினார். தனி மனிதனின் முக்கியத்துவத்தைப் போற்றி, மக்கள் இன்பத்தைப் பெருக்குவதைத் தவிர, வேறெதற்கும அரசாங்கம் மக்களுடைய விவகாரங்களில் தலையிடக் கூடாது என்றும் கூறினார் பெந்தாம்.

ஜான் ஆஸ்டின்—1790—1859

பெந்தாமைப் பின்பற்றியவர்களில் முக்கியமானவர் ஆஸ்டின் என்பவர். ஒப்பந்தக் கொள்கையை அவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. சாதாரணமாக மனிதர்கள் கீழ்ப்படிந்து, கீழ்ப்படிந்து வந்த பழக்கத்தினாலேயே அரசுக்கு அடங்கி நடக்கிறார்கள். அரசு இருப்பதாலும், அது தொடர்ந்து இருப்பதாலும் பயன் விளையுமென்று கருதி விவரம் தெரிந்தவர்கள் அதற்குக் கீழ்ப்படிகிறார்கள், என்றார் ஆஸ்டின்.

ஒரு நாட்டில் முடிவான சர்வ அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதைப்பற்றி, ஆஸ்டின், ஒரு சட்ட விளக்கம் தந்தார். 'எந்த ஒரு மேலதிகாரி, தன்னைப்போன்ற வேறொரு மேலதிகாரிக்குக் கீழ்ப்படியும் நிலையின்றி ஒரு குறித்த சமூகத்தில் வாழ்பவருடைய வழக்கமான கீழ்ப்படிதலைப் பெற்று வருகின்றானோ, அவனே அந்தச் சமூகத்தில் சர்வ அதிகாரம் பெற்றவன். அந்த மேலதிகாரியைக் கொண்ட அந்தச் சமூகம் தனியாக வாழக்கூடிய ஒரு அரசியல் சமூகம்" என்றார்.

இம்மாதிரி சமூகத்தில் முடிவான அதிகாரத்தைக் கொண்டவன் யாருக்கும் கட்டுப்பட்டவனல்ல. சட்டங்களை அவனே இயற்றுவதால் அவைகளுக்கு அவன் அடங்கினவனல்ல, என்றார் ஆஸ்டின்.

ஹென்றி மெயின்

இக்கொள்கையைக் கண்டித்தவர் சர்ஹென்றிமெயின் என்பவர், அவர் இந்தியாவில் சில காலம் ஆங்கிலேயர் ஆட்சியில் வேலை பார்த்தவர். முடிவான அதிகாரத்தையுடைய ஒருவன் எதையும் செய்யலாம். சமூகத்தில் வாழும் அத்தனை பேரும் அவன் என்ன செய்தாலும் அவனுக்கடங்கினவர்கள் என்று ஆஸ்டின் சொன்னது நடைமுறைக்கு ஒவ்வாது என்றார் மெயின். இந்தியா போன்ற நாடுகளில் யதேச்சாதிகாரிகளான மன்னர்கள் கூட, புராதன பழக்க வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் அவமதித்தால் நேரிடக்கூடிய விளைவுகளை நினைத்துப் பயந்து கட்டுப்பட்டு நடந்துகொள்ளுவதுதான் வழக்கம். பஞ்சாபில் எதிர்ப்பவனை வாழவிடாத எல்லையற்ற சக்தி பெற்ற மூர்க்கனான ரஞ்சிட்சிங் என்ற மன்னனுங்கூட மக்களுடைய புராதனப் பழக்க வழக்கங்களை மதித்துத்தான் நடக்கவேண்டியிருந்தது இந்தியா போன்ற கீழ் நாடுகளில் மட்டுமல்ல, மேனாடுகளிலும் கூட ஒரு அரசின் சர்வ அதிகாரத்துக்கு வரம்புகளுண்டு என்றார் மெயின்.

அரசனால் அல்லது சர்வ அதிகாரம்கொண்ட ஸ்தாபனத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும், அதே சமயத்தில் பழக்கத்தையொட்டி மக்கள் அநுசரித்து வரும் வேறு நியதிகளும் ஒரு நாட்டில் உண்டு, என்பதை உணர்ந்து ஆஸ்டினே தனது நூலில் வேறொரிடத்தில் "அரசன் எதை அநுமதிக்கிறானோ, அதை அவன் கட்டளையிடுவது போலத்தான்" என்கிறார். புராதனப் பழக்க வழக்கங்கள் மன்னனின் வல்லமையைக் கட்டுப்படுத்துகின்றன என்ற வாதத்திற்கு இவ்வாறு ஆஸ்டின் பதிலிறுக்கிறார். எடுத்துக்காட்டாக— இங்கிலாந்தில் பழக்கத்தையொட்டி சில நியதிகள் அமுலிலிருக்கின்றன. அவைகள் சர்வாதிகாரம் பெற்ற பார்லிமெண்ட் மக்கள் சபையால் நிறைவேற்றப் பட்டவையல்ல. ஆயினும் அவை பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்து வருகின்றது. நீதி மன்றங்களில்கூட இவ்விதப் பழக்கங்கள் மதிக்கப்படுகின்றன. அவைகளை ஆதாரம் காட்டி நீதி வழங்கப்படுகிறது. அதனால் பார்லிமெண்ட் சபையினுடைய சர்வ அதிகாரத்தை எவ்விதத்திலும் குறைத்துவிடுமா? என்று ஆஸ்டின் கேட்கிறார். இப்பழக்கங்களை மாற்றுவதற்கு அதிகாரமும்

(11-ம் பக்கம் பார்க்க)

லூகான் நகர் சென்றதும் ரிஷ்லு, தன் புகழ் மங்கி விடும்படி இருந்துவிடவில்லை — புகழ் துருப்பிடிக்கவும் கூடாது, அரசாள்வோர் கவனத்தைக் கவரத்தவறவும் கூடாது என்பது ரிஷ்லுவுக்கு நன்ருகத் தெரியும்.

பிராடெஸ்ட்டென்ட் கொள்கைகளைக் கண்டித்தும், கத்தோலிக்கக் கோட்பாடுகளை ஆதரித்தும் அரியதோர் ஏடு தீட்டினுன்—மார்க்கத் துறையினர் கண்டு பாராட்டும் வகையில்! புகழ் பரவலாயிற்று! மன்றம் பல பேசலாயின, ரிஷ்லுவின் நுண்ணறிவு பற்றி. கத்தோலிக்க மார்க்கத்தை உலகெங்கும் பரப்பி, எதிர்ப்புக்களை ஒழித்துக்கட்டும் பேராற்றல் படைத்தவர் இந்த ரிஷ்லு என்று கொண்டாடினர். சிலர், மார்க்கத் துறையிலே ஈடுபட்டு மானிலம் புகழும் இடம் பெறுவதை விட்டு, ஏன் இவர் சிலகாலம் அரசியல் சேற்றிலே உழன்று கிடந்தார் என்று பேசினர். ரிஷ்லுவுக்கு இந்த வெற்றி, களிப்பளித்தது. நாடு நம்மை மறந்துவிடவில்லை! புகழ்கிறது! கவனத்தில் வைத்திருக்கிறது—என்று எண்ணி மகிழ்ந்தான்.

கத்தோலிக்கக் கோட்பாட்டுக்கு பிராடெஸ்ட்டென்ட் புயலால் ஏற்பட்ட ஊறுகளைப் போக்கவேண்டும் என்பதல்ல, ரிஷ்லுவின் எண்ணம். ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்படவில்லை, ஆற்றலைக் காட்டியபடி இருந்தால், அந்த வாய்ப்பு அளிக்கப்படும், ஆற்றலைக் காட்ட இந்த ஏடு பயன்படட்டும் என்பதற்காகவே தீட்டினுன். உண்மையாகவே, மார்க்க சம்பந்தமான பணியிலே ஈடுபடவேண்டுமானுல் வாய்ப்பா இல்லை! ஏராளம்!!

இந்த ஏழாண்டு ஓய்வின்போது, ரிஷ்லுவுக்கு, ஜோசப் பாதிரியார் உற்ற நண்பராஞர்.

ஜோசப், ரிஷ்லுபோன்றவரல்ல, ஆற்றல் உண்டு நிரம்ப, அதற்கேற்ற அளவு நேர்மை உண்டு. கொள்கை உண்டு, அதற்காகச் சுயநலத்தைத் தியாகம் செய்யும் பண்பு உண்டு. கூர்மையான மதிபடைத்தவர், அதனைத் தமக்குப் புகழோ நிதியோ சேர்க்க அல்ல, தன் கொள்கையின் வெற்றிக்காகச் செலவிட்டு வந்தவர்.

கத்தோலிக்க மார்க்க வெற்றியே, ஜோசப்பின் மூலாதாரக் கொள்கை.

கிருஸ்தவ மார்க்கத்தைப் பாதிக்கும் முறையில் நடந்துகொள்கிருர்கள் என்ற காரணம் காட்டி, முஸ்லீம்களுடன் புனிதப் போர் நடாத்திவந்தவர்களுக்குஇருந்தது போலவே, ஜோசப்புக்கு, இஸ்லாமிய ஆதிக்கத்தைத் தீர்த்துக்கட்டவேண்டும் என்ற பேரவா, தீஎனக் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்தது. புதியதோர் புனிதப்போர் தொடுக்கத்நூபமிட்டார், பலிக்கவில்லை. பிறகு அவர், பிரான்சு நாடு, கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஏற்ற திரு இடம் என்று எண்ணினுர், அங்கிருந்தபடி, ஐரோப்பாவில் பல்வேறு இடங்களிலே பரவிக்கொண்டிருந்த பிராடெஸ்ட்டென்ட் மார்க்கத்தை மாய்த்தொழிக்கலாம் என்று எண்ணினுர், ரிஷ்லுவுக்கு இது தெரிந்துவிட்டது! ரிஷ்லு, கத்தோலிக்க மார்க்கத்தைச் சிறப்பித்தும், பிராடெஸ்டென்ட் கண்டனங்களைச் சின்னுபின்னமாக்கியும் தீட்டிய ஏடு, ஜோசப்புக்கு ஆர்வமூட்டிற்று. இருவரும் நண்பராயினர். ரிஷ்லுவைக் கொண்டு, கத்தோலிக்க மார்க்கத்தை ஒளிவிடச் செய்யலாம் என்ற நம்பிக்கையுடன், ஜோசப், தமது செல்வாக்கை, ரிஷ்லுவுக்குத் துணையாக்கினுர். ஆர்வமும் ஆற்றலும், ஓயாது உழைக்கும் திறனும், ஒன்றையும் தனக்கெனத் தேடிக் கொள்ளாப் பண்பும், பல்வேறு நாடுகளிலே செல்வாக்கும் கொண்டிருந்த ஜோசப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஆதிக்கபுரி போய்ச்சேரலாம் என்று ரிஷ்லு திட்டமிட்டான். இருவருக்கும் ஏற்பட்ட கூட்டுறவு, ரிஷ்லுவுக்குப் பெரும் பயனளித்தது—ஜோசப் இறந்துபடும் வரையில், ரிஷ்லுவுக்காகவே, உழைத்தார். ரிஷ்லுவின் மனமறிந்து திறமையுடன் காரியமாற்றினுர். ரிஷ்லு, அரசாளும் காலத்திலே பெற்ற பல ஆச்சரியமான வெற்றிகளுக்கு ஜோசப்பின் அறிவாற்றல், பெரியதோர் காரணமாக அமைந்தது.

ஜோசப்பின் செல்வாக்கினுல், அரண்மனையில் கூட, ரிஷ்லுவிடம் இருந்த அவநம்பிக்கையும் பயமும் ஓரளவு குறைந்தது.

ரிஷ்லுவுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

மேரி; தன் நிலையில் திருப்தி பெறமுடியுமா! அரண்மனையில் எல்லா அதிகாரங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த அம்மை, லைனஸ் எனும் ஊர்பேர் அறியாதான் அரசாண்டு கொண்டிருப்பது கண்டு எங்ஙனம் மனம் பொறுக்க முடியும். சூழ்ச்சிகள் மூலம் மீண்டும், இழந்த இடத்தைப் பிடிக்கவேண்டும் என்ற ஆவல் வளர்ந்த வண்ணம் இருந்தது.

மகனுக்கும் அன்னைக்கும் இடையே இயற்கையாக இருந்து வந்த பாசம், லைனசால் கெட்டுவிட்டது.

ஆன் அரசி எப்போதும்போலவே, கண்ணீர்உகுத்துக்கொண்டுதான் இருந்தாள்.

பிரபுக்கள், இந்தப் 'புதிய நோய்' போக மருந்து உண்டா என்று ஏக்கத்துடன் கேட்டனர்.

"சரக்கு மாறவில்லை—விலாசம்தான் புதிது!" என்று ஒருவர், லைனசின் ஆட்சியைக் குறிப்பிட்டார்.

கான்சினி, காண்டி, இவர்களிடம் காணப்பட்ட போக்கே லைனசிடமும் இருந்தது.

உறவினர்களுக்கெல்லாம் செல்வம், செல்வாக்கு,

பட்டம் பதவி! அள்ளி அள்ளி வீசினான், லைனஸ்; கேட்க நாதி இல்லை. எதிர்த்திடத் துணிந்தவர்கள் அழிக்கப் பட்டனர்.

இந்த நிலையில், மேரி அம்மை, ப்ளாயிசில் சோம்பிக் கிடந்து பயனில்லை அங்கிருந்து வெளியேறி, பிரபுக்கள் சிலரின் உதவியைத் திரட்டிக்கொண்டு, லைனசை எதிர்த்தொழித்து, மகனை மீட்டு அவனை மன்னனாகக் கொண்டு பழையபடி தன் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும், என்று தீர்மானித்தாள்.

எபர்னன் பிரபுவுக்கு அதுபோது பிரான்சிலே நல்ல செல்வாக்கு, அவருடைய உதவியைப்பெற, மேரி திட்ட மிட்டு மங்கலான நிலவொளி இருந்த ஓரிரவு, சாளர வழியாக நூலேணி போட்டுக் கீழே இறங்கிப் ப்ளாயிஸ் மாளிகையை விட்டு வெளியேறி, எபர்னன் மாளிகைவந்து சேர்ந்தாள்.

மேரி தப்பிச்சென்ற செய்தி பிரான்சிலே பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இரவில்! சாளரவழி! நூலேணி!!—மக்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு வியப்படைந்தனர்.

எபர்னன் பிரபு, மேரி அம்மைக்குத் துணைபுரியச் சம்மதித்தார்—லைனசினிடம் வெறுப்புக் கொண்ட வேறு சீமான்களும் பக்கத்துணையாயினர்! மேரி அம்மையின் திட்டம் வெற்றிதந்துவிடும் என்ற நம்பிக்கை உதய மாயிற்று.

மன்னனும் லைனசும் கவலைப்பட்டனர்—எப்படி இந்த ஆபத்தைத் தவிர்ப்பது என்று யோசித்தனர்—ஜோசப் யோசனை கூறினர், "மேரி, படையுடன் பாரிஸ் வராதபடி தடுக்கக் கூடியவர் ஒருவர்தான் உண்டு—அவர்தான் ரிஷ்லு!" என்றார். ரிஷ்லு அழைக்கப்பட்டார்! என்னைப் பாரிசைவிட்டுத் துரத்தினீர்களே, நான் ஏன் உங்களுக்குத் துணைபுரிய வேண்டும்? நான், மேரி அம்மைக்கே உதவி புரிவேன். மேரியின் தயவுதான் எனக்கு அரண் மனைக்கு நுழைவுச் சீட்டாக இருந்தது. எனவே நான் பாரிஸ் வாரேன்" என்றல்லவா, ரிஷ்லு நிலையில் தள்ளப் பட்ட எவரும் கூறுவர். ரிஷ்லு பாரிஸ் சென்றான், மேரி அம்மைக்கும் மன்னனுக்கும் சமரசம் உண்டாக்கி வைக்கும் பணியைச் செய்து முடிப்பதாக வாக்களித்து, எபர்னன் சென்று, மேரியிடம் பேசி போரை நிறுத்தி வைத்ததுடன், சமரச ஏற்பாட்டையும் தயாரித்துத் தந்தான்!

ஒருபுறம் மன்னன், அவனுடன் கீழே சாயப்போகும் லைனஸ்.

மற்றோர்புறம் சூழ்ச்சித் திறமும் ஆதிக்க ஆசையும் மிகுந்த மேரி—அம்மையைச் சுற்றி அதிகார போதையைப் பருகி அட்டகாசம் செய்ய வல்ல பிரபுக்கள்.

இந்த இருதரப்பிலே, மேரி தரப்பினுடைய கரம் வலுத்தால், தன் ஆதிக்க நோக்கம் ஈடேறும் வழி அடியோடு அடைபட்டுவிடும், எனவே, மேரியின் திட்டம் வெற்றிபெறக் கூடாது—வெற்றிபெற விடக்கூடாது,

மன்னன்? பரவாயில்லை! கரத்தில் சிக்குவான்! லைனஸ்? அசடன்! ஆடி அழிவான்!!—எனவே மன்னர் தரப்புக்கே துணைநிற்க வேண்டும், என்று ரிஷ்லு தீர்மானித்தான்.

ரிஷ்லுவின் பேச்சுக்கு மேரி, ஏன் இணங்க வேண்டும்? மேரி, அடைந்திருந்த அவமானம் சாமான்ய மானதல்ல. வேட்டைக்கார வெறியன், அரண்மனையை விட்டே துரத்தினான். கீறிய கோடு தாண்டாதிருந்த மன்னனை, மகனை, பிரித்து வைத்தான், பகை மூட்டி விட்டான். எபர்னன் பிரபுவின் ஆற்றல் துணை நிற்கிறது—வெற்றி எளிது!—இது மேரிக்குப் புரியக் கூடியதுதானே! ஏன், ரிஷ்லுவின் சமரசப் பேச்சுக்கு இணங்க நேரிட்டது?

ரிஷ்லு, தர்பார் தளுக்கனல்ல! பாவையரை மயக்கும் பாகு மொழி பேசியும், சொக்கவைக்கும் புன்சிரிப்பு காட்டியும், கீதமிசைத்தும் நடனமாடியும், களிப்பூட்டியும், காதலைப் பொழிந்தும், காரிகையரைக் கொல்லும் உல்லாசக் கல்லூரியில் தேறியவனுமல்ல! நோயாளி! பகட்டுடை அணிந்து பரிமளம் பூசிக்கொண்டு மினுக்கும் பட்டுப் பூச்சியுமல்ல! மத அதிபர் உடை! நோயும் ஓயாத உழைப்பும், தாங்கித் தாங்கி முகத்திலே, வேதனை ரேகை நன்றாகப் படர்ந்திருந்தது. எனினும், ரிஷ்லுவுக்கு யாருடைய கவனத்தையும் தன்பக்கம் இழுக்கவல்ல முக அமைப்பு இருந்தது! கவர்ச்சி அல்ல! அளவளாவலாம், தோழமை கொள்ளலாம், என்ற ஆசை எழவில்லை, எனினும், அவனைப் பார்த்ததும், மனதிலே பதிந்து விடுகிறான். இத்தாலியச் சாணக்கியன் மாக்கியவல்லி கூறினான், "மன்னன், நேசிக்கப்படத் தக்கவனாக இருப்பதைக் காட்டிலும் அச்சமூட்டத் தக்கவனாக இருப்பது நல்லது" என்று. ரிஷ்லு, அந்த ஓவியமாக விளங்கினான். நேசிக்க அல்ல, அச்சம் கொண்டிட வைத்தது, ரிஷ்லுவின் தோற்றம், அவனுடைய கண்களே, கருவூலங்கள்! ஒளி, ஆவலைக் காட்டுவதாக மட்டுமல்ல, உறுதியை, நினைத்ததைச் சாதித்தே தீருவான் என்ற உறுதியை உமிழ்ந்தது! ஆடம்பரம் இல்லை, உடையில், நடையில். ஆனால் அதிகாரத்தைத் திறம்பட நடத்தும் போக்கினன் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

இந்த ரிஷ்லுவிடம், மயக்கமா, மேரி அம்மைக்கு! உண்டு, என்கிறார்கள்—இருக்கக்கூடும், அம்மையின் இயல்பைக் கவனித்தால்!

அமெரிக்கப் பிரபுவும், வடநாட்டுச் சீமானும்!

டாடாவுக்குப் பண உதவி தேவையாம்!

ஆண்டுக்கு எட்டு லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யும் அவரது ஆலை, இருபது லட்சம் டன், உற்பத்திசெய்யப்போகிறதாம், இனிமேல்.

இதற்காகப் பணம் தேவையாம்—அதனால்; டாடா அமெரிக்காவுக்குப் பறந்திருக்கிறார்.

உலக பாங்கியையும், அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி பாங்கியினையும் கடன் கேட்கப்போகிறாராம், டாடா.

ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல—ஆலை உற்பத்தியை அதிகரிக்கத் தேவைப்படுவது 70 கோடி ரூபாய்களாம்!!

இத்தொகையைக் கொடுக்க மேற்படி பாங்கிகள் தயங்கினால், அமெரிக்கப் பிரபுக்களையும் நாடி, பணம் கடன் கேட்பாராம்.

அமெரிக்காவின் பண உதவியை 'தியாகம்' செய்யவேண்டும் என்று தீட்டுகிறார் அறிக்கைகளை, ஆச்சாரியார்.

ஆனால், டாடா, அமெரிக்கப் பிரபுக்களை நாடிச் செல்கிறார்.

அகில உலக பாங்கி, நாடுகளுக்குமட்டுமே கடன் கொடுக்கும் என்று எண்ணினோம்—டாடாவோ, தன்னுடைய காரியத்துக்குப் பணம் கேட்கப்போகிறார். இதற்காக, டில்லியின் அனுமதியைப் பெற்றாரா டாடா, இல்லையா என்பது தெரியவில்லை!

அமெரிக்கப் பிரபுக்களை நாடி, கடன் கேட்கச் செல்லுகிறார்.

ரிஷ்லு, இதற்கு இணங்கினதாக ஆதாரமும் இல்லை, நடவடிக்கைகள் இவ்வகையில் ஏதும் இல்லை.

பொதுவாகவேரிஷ்லுவுக்கு!அந்தச்'சபலம்'கிடையாது. நோயும், நோயைவிடக் கடுமையாக மனதைப் பிடித்துக் கொண்டிருந்த ஆதிக்க நோக்கமும், ரிஷ்லுவுக்கு அந்தச் சபலத்தைத் தந்திராது—மேலும் வாலிப வயது முதல் தேவாலயத்திலே அல்லவா, வேலை!! எனவே, ரிஷ்லு, விருந்து தேடிடும் வீணனாக இல்லை. ஆனால், மேரி, அம்மைக்கு ஏதோ ஒரு வகையான மயக்கம் இருப்பது மட்டும் ரிஷ்லுவுக்குத் தெரிந்தது—அந்தப் பொல்லாத குணம் கூடாது என்று ரிஷ்லு உபதேசம் செய்யவில்லை, ஒதுங்கிக் கொள்ளவில்லை, அரண்மனை ஆயிரத்தெட்டுக் கேடுகள் நடமாடும் இடம் என்று மிரண்டு ஓடிவிடவில்லை. அம்மைக்கு அவ்விதமான மயக்கம் இருப்பதும் நல்லது தான், அதனை எப்படி, ஆதிக்கம் பெறப் பயன்படுத்திக் கொள்வது, என்று மட்டுமே எண்ணினான்.

“நான் இருக்கிறேன்! இதோ! உன் எதிரில்! எப்போதும்!” என்று தன்னைக் காட்டிக் கொள்வது மட்டும் போதும், இணங்கிவிடுவது கூடாது, பெறவேண்டும் என்ற ஆவல் தரும் சுவையைவிட, பெற்றுவிட்டால் கிடைக்கும் சுவை குறைந்த தரமாகி விடும், எனவே ஆவல்மட்டும் இருக்கட்டும், அது அணையா தீபமாக இருக்கட்டும், என்று எண்ணி ரிஷ்லு நடந்துவந்ததாகக் கூறப்படுகிறது.

ரிஷ்லுவின் போக்கைக் கவனிக்கும்போது, இது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று தள்ளிவிடுவதற்கில்லை.

இப்படி ஒரு மயக்கம் இருந்தாலொழிய, மேரி அம்மை, நெருக்கடியான நேரத்தில் எல்லாம், ரிஷ்லுவின் பேச்சுக்கு ஏற்றபடி தன் திட்டத்தைத் திருத்திக் கொள்வதற்குக் காரணம் வேறும் காணக்கிடைக்கவில்லை.

எப்படியோ ஒன்று, சமரசம் ஏற்பட்டுவிட்டது — தாயும் மகனும் அளவளாவினர்—நாடு ஓரளவு நிம்மதி கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தது.

ரிஷ்லுவுக்கு இதனால் என்ன இலாபம்? இல்லாமற்போகுமா? கார்டினல் எனும், உயர்தர மத அதிபர் பதவியை ரிஷ்லுவுக்கு போப்பாண்டவர் அளித்தார். இந்தப் பதவியில் ரிஷ்லுவை அமர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது!

கார்டினல் எனும் நிலைபெற, மார்க்கத் துறையிலேயே பன்னெடுங்காலம் ஈடுபட்டுக் காத்துக் கிடப்பர் பலர்; ஆனால் ரிஷலுவுக்கோ! ஒரு அரசியல் குழப்பம் — சமரச முயற்சி—கார்டினல் பதவி!

எபர்னன் பிரபுவின் பேருதவியை நம்பித்தான் மேரி, மன்னனை எதிர்க்கத் துணிந்தது. ரிஷ்லு எப்படியோ அம்மையின் மனதை மாற்றி, மன்னனிடம் சமரசமாகிவிடும்படி செய்துவிட்டான். இந்தச் சமரசம் நிலைக்கவில்லை என்ற போதிலும், இந்தச் சம்பவம், அரண்மனையில் ரிஷ்லுவின் செல்வாக்கை வளமாக்கிவிட்டது. ஒரு நாள் எபர்னன் பிரபு, மாளிகை மாடியிலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும்போது ரிஷ்லுவின் ஆதரவாளர் ஒருவர், படிக்கட்டில் அவரைக்கண்டு, “பிரபுவே! என்ன ஏதேனும் விசேஷம் உண்டா?” என்று கேட்க, எபர்னன், “ஏன் இல்லை!! நீங்கள் உயரப்போகிறீர்கள், நான் கீழே இறங்குகிறேன்!” என்று பதிலளித்தாராம்!! யூகம் நிரம்பியபதில். எபர்னனுக்கு மேரி அரசி ஏதும் உதவி செய்யவில்லை; ரிஷ்லுவுக்கோ, அன்னையும் ஆதரவு தந்தார், அரியாசனத்திலிருந்த மகனும் தந்தான்!!

இது எனக்கு எம்மாத்திரம், என்றுதான் ரிஷ்லு எண்ணினர், ஆனால் பயனற்றது என்று கூறவில்லை. பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

சமரசம் முறிந்ததும், மீண்டும் சமர் கிளம்பிற்று— மீண்டும் சமரசம்—இப்படி நிகழ்ச்சிகள் ஊஞ்சலாடின— இந்நிலையில், லைனஸ் இறந்துபட்டான்—மன்னன், யாராருடைய துணைகொண்டோ துரைத்தனம் நடத்திப் பார்த்துச் சலிப்புற்று, ரிஷ்லுவுக்கு அழைப்பு அனுப்பினான், 1624-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ம் நாள், ரிஷ்லு மீண்டும் ஆட்சிக் குழுவில் இடம்பெற்றான்—நாலு திங்களில், உடனிருந்த அமைச்சர்களை மூலையில் அமரச்செய்துவிட்டு, முதலமைச்சரானான் — முடிதரித்தவன் லூயி — ஆட்சி, கார்டினல் ரிஷ்லுவிடம்! நீண்டகாலத் திட்டம் பலித்துவிட்டது! பிரான்சு, ரிஷ்லு கரத்தில் சிக்கி விட்டது. லூகான் தேவாலயத்திலே பூஜாரி வேலையா பார்க்கச் சொன்னார்கள், பிரான்சை ஆளும் பெரும் பதவிக்கு, ஏற்ற என்னை! என்று எண்ணினான். பெற்றதைப் பலப்படுத்தும் பெரும் பணியைத் துவக்கினான். மன்னனை மெள்ள மெள்ள வசப்படுத்திக் கொண்ட, ரிஷ்லு, பிரபுக்களின் கொட்டத்தை அடக்குவது ஹ்யூஜீநாட்ஸ் எனும் பெயர் படைத்த பிராடெஸ்டெண்ட் மக்களை ஒடுக்குவது, வெளிநாடுகளில் பிரான்சின் கீர்த்தியை நிலைநாட்டுவது எனும் மூன்று திட்டங்களை மேற்கொண்டு ஒவ்வொன்றிலும் வெற்றி கண்டான். இந்த வெற்றிகளை வரலாற்று ஆசிரியர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். இந்த வெற்றிகளுக்கு ரிஷலு கையாண்ட முறைகளோ, மிகக் கொடுமையானவை.

ரிஷ்லுவின் 'ஒற்றர்கள்' நாடெங்கும் பூனைபோலுலவி, 'சேதிகளை'க் கொண்டுவந்து தருவர், தனக்குப் பிடிக்காதவர்கள், ஆற்றலை வெளிப்படுத்துபவர், அரண்மனையில் புகும் உரிமை கொண்டவர்கள் ஆகியோரை, சதி வழக்குகளில் சிக்கவைக்க, இந்தச் சேதிகள் மெத்தப் பயன்பட்டன. மாளிகைகளிலே மருட்சி! ஒவ்வொரு பிரபுவும் தனக்கு எப்போது ஆபத்து வருமோ என்ற திகிலுடனேயே உலவிட நேரிட்டது. சதி வழக்குகள் தொடுத்தால், தக்க ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் கடும் தண்டனை தரப்படும்—காரணம் கேட்டவருக்கு ரிஷ்லு சொன்னான், “சதி வழக்குகளுக்கு ஆதாரங்கள் அப்பழுக்கின்றி கிடைக்குமா! யூகித்தறிந்த விஷயமே போதும் தண்டனை தர” என்று. இப்படிப்பட்ட விபரீத நியாயம்—முறையாகி விட்டது.

மன்னனிடம், “என் கடன் தங்கள் ஆட்சியைப் பலப்படுத்துவதுதான், தங்களை எதிர்க்கத் துணிவு காட்டும் பிரபுக்களை அழித்து, அரச பலத்தை அதிகரிக்கச் செய்வதுதான்; தங்கள் ஆட்சியின்போது பிரான்சு நாடு பிற நாடுகளால் பெரிதும் மதிக்கப்பட்டது என்று நிலை இருக்க வேண்டும்; அதற்கான முறையிலே பணிபுரிகிறேன்” என்று சொல்லி, காட்டிய இடத்தில் கையொப்பமிடும் கருவியாக மன்னனை ஆக்கிக்கொண்டான்.

பல பிரபுக்கள், ரிஷ்லுவின் பகைக்கு ஆளாகி, ஈவு

இரக்கமின்றி அழிக்கப்பட்டனர்—ஒரு பிரபுவாவது மக்களுக்குக் கேடுசெய்தான் என்பதற்காக அல்ல, மன்னனுக்கு நிகராகத் தன்னை எண்ணிக்கொண்டான் என்பதற்காகவே!

அரசனுக்காக! பிரான்சுக்காக! என்றுதான் ரிஷ்லு, தன் நடவடிக்கைகளுக்கெல்லாம், விளக்கம் தந்தானே தவிர, மக்களுக்காக என்று ஒரு செயலையும் மேற்கொள்ளவில்லை.

மக்கள், எப்போதும் போல ஏக்கமிகுந்து இருந்தனர்—பசி தீரவில்லை, வாழ்க்கை சிறக்கவில்லை—தொழில் வளம் பெருகவில்லை, உரிமைக் குரலுக்கு இடமே இல்லை. பிரபுக்கள் ஒரு புறத்தில் அவர்களைச் சுரண்டினர், மத அதிபர்கள் மற்றோர் புறம் அரித்தனர். இந்தக் கொடுமைகளைக் களைய ரிஷ்லுவின் ஆற்றல் பயன்படவில்லை—அடிப்படையில் வெடிப்புக் கிடந்தது, ரிஷ்லுவோ, கலசத்துக்குப் பொன் முலாம் பூசிக்கொண்டிருந்தான்.

ரிஷ்லுவை எதிர்த்து, மன்னனுடைய தம்பி, காஸ்ட்டன் பன்முறை கிளம்பினான்—ஒவ்வோர் முறையும் பரிதாபகரமான தோல்வியே கண்டான்.

மன்னன் தம்பி என்பதால் அவன் தலை தப்பிற்று—உடன் இருந்தோரின் தலைகள் உருண்டன.

வேண்டுகோள், அழுகுரல், கருணைமனு, எதனையும் பொருட்படுத்துவதில்லை, பாதையிலே குறுக்கிட்டால் தீர்ந்தது, பயங்கர மரணம்தான் பரிசு!

தன்னைச் சுற்றிலும் வேவுபார்ப்போர், தகவல் திரட்டுவோர், ஆகியவர்களை அமர்த்திக்கொண்டு, ரிஷ்லு நடத்தி வந்த ஆட்சி முறையின் கடுமை கண்டு, பலரும் கலங்கினர்.

மன்னனின் தம்பி, காஸ்டன், காமக்களியாட்டத்திலே காலந்தள்ளி வந்த பதினெட்டாண்டு வாலிபன். அவனை ஆதரவாக நம்பி, இரு பிரபுக்கள் எதிர்ப்பு மூட்டினர்—ரிஷ்லுவுக்கு, சதி, கருவிலிருக்கும்போதே தெரிந்துவிட்டது—பிரபுக்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது—காஸ்டன், அண்ணனிடம் மன்றாடி உயிர் தப்பினான், ஒரு பிரபு சிறையில் தள்ளப்பட்டு மாண்டான்—காய்ச்சல் என்று கூறப்பட்டது. மற்றோர் பிரபுவுக்கு நேரிட்ட கதி, பிரான்சையே நடுங்க வைத்தது. காலே எனும் அந்தப் பிரபுவின் தலை சீவப்பட்டு, கோலில் செருகப்பட்டு, சதுக்கத்தில் காட்சியாக வைக்கப்பட்டது. உடல் நாலு கூறாக்கப்பட்டு, ஊரின் நான்கு நுழைவு வாயல்களிலும் தொங்க விடப்பட்டன!

தேவாலய அதிபராக வாழ்க்கையைத் துவக்கியவரின், கருணை நிரம்பிய உள்ளம் இது! இப்படியா, என்று கேட்டால், அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற ஒரே பதில்!

காலே என்பவனுடைய தலை சீவப்பட்டது என்றால், எவ்வளவு காட்டுமிராண்டித் தனமான முறையில்.—தலைவெட்டுவதற்கு தக்க ஆள் கிடைக்கவில்லையாம், எனவே இரு கைதிகள் இந்தக் காரியத்துக்கு அமர்த்தப்பட்டனர்—ஊதியம், விடுதலை! கோடரி கொண்டு இருபத்து ஒன்பது தடவை வெட்டிய பிறகே கழுத்துக் துண்டிக்கப்பட்டதாம். எல்லாம் அரசுக்காக! என்றான் ரிஷ்லு, 'ஆமென்!' என்றான் மன்னன்.

பயங்கரமும் கொடுமையும் நிரம்பிய முறையிலே நடைபெற்ற நடவடிக்கைகள் பலப்பல.

மக்களை வாட்டி வதைப்பவன், ஏழைகளை ஏய்த்தவன், சர்க்கார் பொருளைச் சூறையாடினவன், ஆலயச்சொத்தை அபகரித்தவன், போன்ற ஒரு 'குற்றவாளி' கூட ரிஷ்லுவின் கண்ணுக்குத் தெரியவில்லை! அப்படிப் பட்டவர்களை, குற்றவாளிகள் என்று கருதினால்தானே! ரிஷ்லுவின் கண்களுக்கு ஒரே ஒரு வகையான குற்றவாளி மட்டுமே தெரியும்—தன் ஆதிக்கத்துக்குக் குறுக்கே நிற்பவன்! அதுதான், பெருங் குற்றம்—மற்றவை, ரிஷ்லுவின் கவனத்துக்கு உரியன அல்ல!

லூயி இறந்துபட்ட பிறகு, மன்னன் பொழுதுபோக்குக்காகவேனும், தன் இல்லக்கிழத்தி ஆன்ராணியை நாடினானா! இல்லை! தன்னைச் சுற்றிலும், அழகு மங்கையரை உலவச்செய்து, ஒருவிதமான திருப்தி பெறுவான். களியாட்டம் மன்னனுக்குப் பிடிக்காது. அணங்குகள் அங்கும் இங்கும், ஆடியும் அசைத்தும், சிரித்தும் உபசரித்துக் கொண்டும் இருப்பர், இடையே மன்னன் இருப்பான்.

மன்னனுடைய பிரத்யேகமான 'அன்பு' ஒரு அழகிக்குக் கிடைக்கும், பிறகு வேறோர் வனிதைக்கு மாறும், ஆனால் எந்த அணங்கையும், மன்னன் காமக் கருவியாக்கிக் கொள்வதில்லை, வெறும் பொழுதுபோக்கு!

கணவனிருந்தும் விதவையாக இருந்த ஆன், தன் அழகையும் இளமையையும் வெறுத்தபடி, ஒதுங்கியே வாழ்ந்து வந்தாள்,

சுழல் கண்ணழகியும், கீத மொழியினளும், மன்னனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருப்பதும், ஆன் அரசியை மன்னன் அனியாயமாக ஒதுக்கிவைத்திருப்பதும் ரிஷ்லுவுக்குத் தெரியும்; தெரிந்து? அந்த நிலை நல்லதுதான் என்று எண்ணிக்கொண்டான். ஆன் அரசியுடன் காதல் வாழ்க்கை நடத்த் ஆரம்பித்தால்! மன்னன் அவள் வசமாகிவிட்டால்! தன் நிலைக்கு என்ன ஆபத்து நேரிடுமோ, யார்கண்டார்கள்! ஆன் அரசி, மேரிபோலாகிவிட்டால்? ஆன் அரசிக்கு வேண்டியவர்களுக்கு ஆட்சிப் பொறுப்புத் தரப்பட்டுவிட்டால்? இப்படிஎல்லாம்எண்ணிய ரிஷ்லு, மன்னனின் மணவாழ்க்கை மலருவது கூடாது என்று விரும்பினான்.

கணவன் மனைவிக்கு இடையே கலகமூட்டி, பிரித்து வைத்துப் பெருங்கேடு செய்கிறான் ஆதிக்க வெறியன் என்று சிலர் குற்றமே சாட்டினார்கள்.

அணங்குகளுடன் கொஞ்சிக் குலவட்டும், மனதுக்கு மகிழ்ச்சி தேடிக்கொள்ளட்டும், ஆனால் எந்த மைவிழியாளிடமும் மன்னன் மனதைப் பறிகொடுத்துவிடக்கூடாது என்பது ரிஷ்லுவின் எண்ணம். மனதுக்கு மகிழ்ச்சியே கிடைக்காவிட்டால் மன்னன், காரணமற்றகோபம், சிரிப்பு, சோகம் ஆகியவைகளுக்கு ஆட்பட்டுவிடுவான்—அதுவும் தொல்லையாகிவிடும். ஒருவேளை, பொழுதுபோக்கே இல்லாத நிலையில் ஆட்சிக் காரியங்களையே கவனிக்கத் தொடங்கிவிடக்கூடும்—அது தொல்லை மட்டுமல்ல, ஆபத்துங்கூட! எனவே மன்னன், ஆடிப்பாடி மகிழவேண்டும், அதற்கு ஏற்ற அழகு மங்கையர் அவன் அருகில் இருக்க வேண்டும்—இந்த ஏற்பாடும் ரிஷ்லு கவனித்துக்கொள்ள வேண்டும், வேறு எவனாவது இந்தத் துறையில் ஈடுபட்டு, மன்னனின் தோழமையைப் பெற்றுவிடுவதும், பேராபத்தாகுமல்லவா!

இலங்கையிலும்!

பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்பட வேண்டுமெனும் கருத்து, வேரூன்றி வருவதாகத் தெரிகிறது. மே 8ந் தேதி கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், பல கட்சித் தலைவர்களும் கூடி, இதுபற்றிப் பேசினராம். முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா, முன்னாள் அமைச்சர் ஆர். ஜி. சேனநாயகா ஆகியோர் கலந்துகொண்டனராம். இந்த முயற்சியில் டட்லி சேனநாயகாவும் முழுமனதோடு ஈடுபட்டிருப்பதால், கோரிக்கை வலுக்கும் என்று தெரிகிறது.

ரிஷ்லு, மன்னனுக்கு இந்த ஏற்பாடு செய்துதரக் கூடியவன் என்ற எண்ணம் பலமாக ஊரில் பரவி இருந்ததால், கதைகள் பல, அவன் காலத்திலும், பிற்காலத்திலும் கட்டிவிடப்பட்டன. நடிகை ஒருவளைச் சீமாட்டி வேடமிட்டு மன்னனைச் சொக்கச் செய்யும் ஏற்பாடு செய்தான் ரிஷ்லு, என்ற கதைபோல், பலப் பல, இதனினும் மோசமான கதைகள் கட்டிவிடப்பட்டன—மக்கள் அவைகளை விரும்பிக் கேட்டனர், சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டனர். டுமாஸ், ஹ்யூகோ எனும் கதாசிரியர்கள், ரிஷ்லுவைக் குறித்தும் அவன் கால நிகழ்ச்சிகளைப் பின்னியும் வகை வகையான கதைகள் தீட்டினர், அவைகளை வரலாற்றுச் சம்பவங்களுக்கு ஒப்ப மதிப்பளித்து மக்கள் வரவேற்றனர். ரிஷ்லுமீது மக்களின் வெறுப்புணர்ச்சி ஏறியவண்ணம் இருந்தது.

மேரியை ரிஷ்லு அடியோடு மறந்தேவிட்டான்—அலட்சியப்படுத்தினன். அவள் சகாப்தம் முடிந்துவிட்டது என்று தீர்மானித்தான். மன்னன், தன் சொற்கேட்டு ஆடும்போது, மேரியின் ஆதாவு ஏன்! மேரியோ, மன்னனைப்போல, ஒதுங்கி இருப்பவளல்ல, அதிகாரத்தில் ஆவல் உள்ளவள், எனவே அவளை அருகே இருக்க விடலாகாது!

பிரபுக்கள் பீதிகொண்டு ஒதுங்கிக்கொண்டனர்; மேரி விரட்டப்பட்டுவிட்டாள்; மன்னனின் இளவல் தலையில்தட்டி உட்காரவைக்கப்பட்டான்; ஆன் காதலறியாது கண்ணீர் பொழிந்தபடி கிடந்தாள்!

அரச குடும்பத்தை இந்த நிலையில் வைத்துவிட்டு, ரிஷ்லு, தன் ஆதிக்கத்தை உச்சநிலைக்குக் கொண்டு சேர்த்தான்.

கத்தோலிக்கர்கள், ரிஷ்லுவின் உயர்வு கேட்டு, மகிழ்ந்தனர், இனிப் பிரான்சில், ஐரோப்பா முழுவதும் கத்தோலிக்க மார்க்கம் நல்ல நிலைமை பெறும் என்று நம்பினர். பேரவையில் ரிஷ்லு இடம் பெற்றதே கத்தோலிக்கரின் ஆதரவினுல்தான். எனவே, ரிஷ்லு தங்கள் மார்க்கத்துக்கு அரண் அமைப்பான் என்று எண்ணினர்.

மதத்துறை அலுவலர்களே இனி, ஆட்சியிலே தங்களுக்கு ஆதிக்கம் சிறக்கும், செல்வாக்கு வளரும் என்று நம்பினர். ரிஷ்லுவின் மார்க்க ஏடு அவர்களை மகிழ்வடையச் செய்தது. ஆட்சியிலே இடம் கிடைத்துவிட்டால் இனி, ரிஷிலு அந்த வாய்ப்பைக்கொண்டு, மார்க்கத்தை மேம்பாடடையச் செய்யவும், மதத் துறையினருக்கு, செல்வாக்குமிகுந்திடச் செய்யவும் பாடுபடுவார் என்று எண்ணினர்.

அவர்களின் எண்ணம் பலிக்கவில்லை. ரிஷலு, பொதுவாக மார்க்கத்தை, சிறப்பாக கத்தோலிக்க மார்க்கத்தை மேன்மை அடையச் செய்யவேண்டும், என்பதை நோக்கமாகக் கொண்டில்லை. ஜோசப் பாதிரியாருக்கு, ரிஷிலுவுக்குக் கிடைத்த வாய்ப்புத் தரப்பட்டிருந்தால், முடிகிறதோ இல்லையோ, அந்த நோக்குடன் பணியாற்றி இருப்பார். ரிஷிலு அப்படிப்பட்ட எண்ணம் படைத்தவரல்ல.

மார்க்கத் துறையில் இடம் பெற்று, புகழ் பெற்று, அதன் மூலம் ஆட்சித் துறையிலே ஆதிக்கம் பெற வேண்டும் என்பதுதான் ரிஷிலுவின் திட்டம். ஒவ்வொரு சம்பவமும், ஆதிக்கம் பெற வழி கோலவேண்டும் என்பது ரிஷிலுவின் எண்ணம். கலம் ஏறிச்செல்வது கடற்காட்சி காணவா! வேறு பொருள் நாடியோ, வேறு இடம் தேடியோ தானே! அதே போலத்தான், ரிஷிலுவுக்கு, மார்க்கம் ஒரு கலம்—கருவி!

முதல் பேரவைக் கூட்டத்திலே ரிஷ்லு, மதத்துறையினர் சார்பில் முழக்கமிட்டார். உண்மை! ஆட்சியாளர்கள், மதத்துறையினருக்குத் தக்க இடமளிக்க வேண்டும், அவர்தம் துணையை நாடிப்பெற்று, ஆட்சியைப் புனிதப்படுத்த வேண்டும், என்றெல்லாம் பேசினுர். மார்க்கத்துறையினர் மகிழ்ந்தனர், நிமிர்ந்து நடந்தனர்! அப்போது ரிஷ்லு, லூகான் நகர தேவாலய அதிபர்! இப்போது? ஈடு எதிர்ப்பற்ற முதலமைச்சர்!! இந்த வித்தியாசத்தை மற்றவர்கள் உணரவில்லை! ரிஷிலு இதனை மறக்கவில்லை ஜெபமாலை தாங்கும் கரம் இப்போது பிரான்சை ஆட்டிப்படைக்கும் கரமாகிவிட்டது! ரிஷலுவின் கோபம், எவரையும் பிணமாக்கும், நேசம், செல்வத்தை, செல்வாக்கை பொழியச் செய்யும்! அன்று பேரவையிலே பண்டார ரிஷலு பேசியதை, இன்று பட்டத்தரசனைப் பதுமையாக்கி, அரசியல் ஆதிக்கம் நடாத்தும்முதலமைச்சர்ரிஷலுவுக்குக்கவனப்படுத்துவதா? என்ன மந்தமதி!! அவர்கள் கண்டார்களா, ரிஷ்லுவின் இத்தகைய மனப்போக்கை. அவர்கள் எண்ணிக் கொண்டது, ஒரு சிறந்த கொள்கைக்காக, உத்தம நோக்கத்துக்காக, ஏசுவுக்காக, அரசியல் ஆதிக்கத்தை ரிஷலு பயன் படுத்துவார் என்று!

ரிஷீலு, கொள்கையை முன்னுல்வைத்து, கோட்டையைப் பிடிக்கவில்லை. ஒரு முதலமைச்சரின் கொள்கை 'காவி கமண்டலங்களை'க் கொலு மண்டபத்துக்குக் கொண்டுவந்து, பாதபூஜை செய்வதாகவா இருக்க முடியும்! மற்ற அமைச்சர்கள், கைகட்டி வாய்பொத்தி நிற்க, அதிகாரிகள் குற்றேவல் புரிய, நீதிமன்றங்கள் குறிப்பறிந்து தீர்ப்பளிக்க, படைவீரர்கள் பகைவர் மீது பாய, ஆட்சிபுரிவது! ஏன் இந்தப் பூஜாரிகளுக்கு இது புரியவில்லை—என்று எண்ணினுன் ரிஷிலு—அவர்களின் கோபத்தை ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லை.

அவர்களின் கோபத்தை மட்டுமா, அவர்களின் 'கண்கண்ட தெய்வம்' போப்பாண்டவரின், கோபத்தையே பொருட்படுத்தவில்லை. (தொடரும்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய நியதிகளை ஏற்படுத்துவதற்குப் பார்லிமெண்ட் சபைக்கு அதிகாரம் இருந்தும் அப்படி அது செய்யவில்லையென்றுல், அவைகளை அது அநுமதித்ததாகத்தான் கொள்ள வேண்டுமே. தவிர அவனுடைய அதிகாரம் அவைகளால் கட்டுப்பட்டதாக கொள்ளக்கூடாது என்ருர்.

இது இங்கிலாந்தைப் பொறுத்த மட்டில் உண்மையாக இருக்கலாம். ஆனுல் இந்தியா போன்ற நாடுகளில் ஆண்ட மன்னர்கள்—புராதனப் பழக்கங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தது அவர்கள் அவைகளை அனுமதித்ததாலல்ல. அவர்களால் அவைகளை மாற்றமுடியாத காரணத்தால். மக்கள் பழமையின் பிடியில் கட்டுண்டு கிடந்தார்கள். பழமையைப் பழித்தால் அல்லது புதுமையைப் புகுத்தினுல் மக்களுடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று பயந்தே அந்த மன்னர்கள் புராதனப் பழக்கங்களைத் தொடாமல் விட்டு வைத்தார்கள்.

அரசன் தடுக்கமுடியாத ஒரு வழக்கத்தை அவன் அனுமதிக்கிருன் என்று சொல்லுவது, ஒருவன் சூரியனைப்பார்த்து "நான் தான் உன்னைப் பிரகாசிப்பதற்கு அனுமதிக்கிறேன்" என்று சொல்லி, சூரியன்மேல் தனக்கு ஆதிக்கம் இருக்கிறது என்று நினைத்துக்கொள்ளுவதுபோல, நகைப்பிற்கிடமானது.

எது நாட்டுக்கு அதிகப் பயன் தரும் என்பதைக் கருதி அதற்கேற்ப மக்களுடைய சுதந்தரத்தை கட்டுப்படுத்த வேண்டும், என்று ஆஸ்டின் கருதினுர். அவருக்கு மக்களாட்சியில் நம்பிக்கையில்லை. அதனுல் இங்கிலாந்தில் வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை அளிப்பதை எதிர்த்தார்.

(தொடரும்)

முடியாத ★ ★ தொடர்கதை!

"அமைச்சரே! நமது நாட்டிலிருக்கும் முட்டாள்களைப்பற்றி ஒரு பட்டியல் தயாரிக்கும்படி சொன்னேனே, என்னவாயிற்று?"

"தயாரித்துவிட்டேன், வேந்தே!"

"முதல் முட்டாள், யார்?"

"தாங்கள் தான்!"

"என்ன? நானு!"

வேந்தனின் விழிகள் மேலேறின! அச்சமின்றி அறிவித்தான் அமைச்சன், முட்டாளின் பட்டியலில் அரசனுக்கு முதலிடம் கொடுத்திருப்பதாக. அதற்கான விளக்கமும் தந்தான்.

"வேந்தே! அன்ருேர் நாள், யாரோ சில அயல்நாட்டு வியாபாரிகளிடம் குதிரைகள் வாங்கினேமே ஞாபகம் இருக்கிறதா?"

"வாங்கினேம்! அழகான குதிரைகள் — அக்கம்பக்கத்து நாடுகளில் எல்லாம் குதிரைகள் இருக்கும்போது நம்மிடம் இல்லையே என்பதால் வாங்கினேம்!!"

"வாங்கியதோடு இல்லாது, இன்னும் பல குதிரைகளைக் கொண்டு வரும்படி பணமும் கொடுத்தீர்களல்லவா, ஏராளமாக!"

"ஆமாம், முன்பணம் கொடுத்தேன்—குதிரைகளுக்காக"

"அப்போதுதான், தாங்கள் தயாரிக்கச் சொன்ன முட்டாளின் பட்டியலில் முதலிடம் கொடுக்கவேண்டும் எனும் எண்ணம் உண்டாயிற்று, எனக்கு. வியாபாரிகள் யாரோ! அறியோம், நாம். விலாசமும், விபரமும் தெரியாது, யாருக்கும். இருந்தும், கஜானுவைத் திறந்து அள்ளிக் கொடுத்தீர்கள், பணம்! இப்படிப்பட்ட காரியம் செய்ய, எந்த சாதாரண முட்டாளுக்குக்கூடத் தைரியம் வராது. ஆனல், நீங்கள் செய்தீர்கள். அதனுல்தான் உங்கள் பெயரைக் குறித்துக்கொண்டேன்"

*

இப்படிப்பட்ட மன்னர்களையெல்லாம் மண்டையிலடிக்கும் வாய்ப்புப் பெற்ற முடிசூடா மாணிக்கமல்லவா நமது நேரு பண்டிதர். அதனுல், பணத்தைக் கொட்டிக் கொடுத்ததுமன்றி, பட்டமும் வழங்கியிருக்கிருர். கதையில் வந்தவன், வியாபாரி. நேருவின் ஆட்சியில் அந்தப் பாக்கியம் பெற்றவர் ஒரு அதிகாரி. பெயர், கே. ஆர். சர்மா. பெற்ற பட்டம், 'பத்மவிபூஷன்'. செய்த வேலையோ, குதிரை தருவதாகச் சொல்லிச் சென்ற எத்தனையும் மிஞ்சுவது! கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிப் பல இடங்களிலும் அணைக்கட்டுகளைக் கட்டுகிறதல்லவா—டில்லிபீடம்; ஆசையோடு, அக்கம்பக்கத்திலிருக்கும் நாடுகளைப்போல மக்களுக்குத் தாங்களும் நன்மைகளைச் செய்வதாகக் குறித்துக்கொள்ள! அப்படிக் கட்டப்படும் பக்ரா அணைக்கட்டு வேலையில், திறமையாகப் பணியாற்றுகிருர் என்பதற்காகவும், அந்தத் திறமை இன்னும் அதுபோன்ற பல அணைக்கட்டுகளைக் கட்டப் பயன்படவேண்டுமென்பதற்காகவும் 'பத்ம விபூஷண்' பட்டம் அளிக்கப்பட்டது — ஆச்சாரியார்போன்ருேர், பாரதரத்னங்களாயினரே, அப்போது! பட்டம் பெற்ற பாக்கியசாலிதான், இப்போது சட்டத்தின்முன்னர் கொண்டுபோய் நிறுத்தப்படவேண்டிய அளவுக்குப் பாதகம் செய்திருக்கிருர். சர்மா ஏற்றிருந்த பொறுப்பு, சூபரின்டெண்டிங் என்சினீயர் எனும் முக்கியதோர் பணியாகும். அப்படிப்பட்ட முக்கியஸ்தர்கள்தானே பட்டம் பெறவும் அருகதையடைவர்கள், இங்கு. முத்தண்ணுவும் சுப்பண்ணுவும் பாராட்டப்பட்டு பட்டம் வழங்கப்படுஃது, ரஷ்யாவில்! இது மாடல் சோஷியலிச நாடல்லவா!! அதனுல், அவரது திறமையை மெச்சி, இந்திய 'ஜனதிபதி' அளித்தார் கௌரவம். அந்தத் திறமை, சர்க்காருடைய பணத்தை, ஏராளமாக ஏப்பம் விட்டுவிட்டதாம்! லஞ்சம் வாங்கிற்ரும்! ஊழல்களைச் செய்ததாம்! சர்க்காரை ஏமாற்றச்சதி புரிந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது, அவர்மீது. பெயர், சர்மா! சென்னைவாசியாகத்தானிருக்கவேண்டும் — திறமைமிக்க வகுப்பெனக் கருதப்படும் இனத்தைச் சேர்ந்த ஆளாகவும் இருக்கவேண்டுமெனத் தெரிவிக்கிறது, சர்மா எனும பெயர்.

இப்படிப்பட்ட 'சர்மாக்களின்' திறமையையும், அவர்கள் தயாரித்துத் தரும் திட்டங்களையும் நம்பி, ஆண்டுதோறும் பண்டிதரின் சர்க்கார் விரயமாக்கிவரும் ரூபாய்கள், ஏராளம். 'பத்மவிபூஷணம்' அப்படிச் செய்ததா! இதோ இன்னொருவர்—இவரும் ஒரு பெரிய அதிகாரிதான். அகில இந்திய வானெலியில், பேரும் புகழும் பெற்று விளங்கியவர். அவருடைய திறமையை மெச்சி, டில்லி சர்க்காரே, தமது செலவில் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பிற்ரும் — வானெலி சம்பந்தமான ஆராய்ச்சிகளை அறிந்துவர. ஆராய்ச்சிகளை அறியச் சென்றவர், அற்புதமான திருவிளையாடலைச் செய்திருக்கிருர்! அமெரிக்காவில் கண்ட அழகான கார் ஒன்றை வாங்கிக்கொண்டு, அதற்குச் செலுத்தவேண்டிய வரிகளையெல்லாம் 'சுவாகா' செய்திருக்கிருர். வரி வாங்குவோர் கேட்டபோது, காரை சர்க்கார் சொத்து எனச் சொல்லி, திருட்டுத்தனம் செய்திருக்கிருர்!! இதனுல், சர்க்கார் கஜானுவுக்கு நஷ்டம்—எனவே இதைப்பற்றி பார்லிமெண்டில் பல உறுப்பினர்கள், கண்டனக் கணைக்களைப் பூட்டவே, விஷயம் இப்போது வெளிச்சமாகியிருக்கிறது.

இப்படி சர்க்காரை, மிகவும் சாதாரணமாகவே ஏமாற்றிவிடலாம் எனும் துணிச்சல், அதாவது 'திறமை' அதிகாரிகள் பலருக்கு இருந்துவருவதையும், அதனுல் ஊழல் பட்டியல்கள் அதிகரித்து வருவதையும், பண்டிதர், பீடம் ஏறிய நாள் முதல், அனுபவித்து வருகிருேம்.

எட்டணு, ஒரு ரூபாய் என்று 'லஞ்சம்' வாங்கிடும ஏழை போலீஸ்காரர்கள், சாதாரண சிப்பந்திகள் என்ருல் சர்க்காரின் சட்டம் உடனே கொட்டிவிடுகிறது! இலட்சக் கணக்கில், 'சுவாகா' செய்யும் பெரிய அதிகாரிகளென்ருல்— வழக்கு வளருகிறது — சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று, கழுதை தேய்ந்து கட்டெறும்பு போலாகிறது.

இப்படி ஊழல்கள் செய்யுமளவுக்கு அதிகாரிகளின் உள்ளம் பக்குவப் பட்டதற்குக் காரணம், தலையாரிகள் சரியாக இல்லாததால்தான்! திறமையுள்ள அரசனென்றால் சேவகம் செய்வோரும், மிரளுவர். நமக்குக் கிடைத்த அரசோ, திறமையில்லாது மட்டுமல்ல — மற்றவர்களுடைய திறமையை எதிர்பார்த்து, வாழ்வது, அதே நேரத்தில், தமது பதவிப் பெருமையை நிலைநாட்டுவதற்காக ஆடம்பரங்கள் மூலம் புகழை விளம்பரப்படுத்த முயல்வது. இந்த விசித்திரப் போக்கால், மந்திரிமார்களின் நேரிய தொடர்பிலிருக்கும், இலாகாக்களில் என்னென்ன ஊழல்கள் ஏற்படுகின்றன என்பதை ஒவ்வொராண்டும் சர்க்காரின் வரவு செலவுகளைத் தணிக்கை செய்யும் இலாகா வெளியிட்டு வருகிறது! இந்த இலாகா சர்க்காருக்குக் கட்டுப்பட்டதல்ல. நீதிமன்றத்தைப்போல விசேஷ அதிகாரம் கொண்டது. ஆகவே, சர்க்காரின் ஊழல்களை, சாதாரணமானோரும் அறிய முடிகிறது! விஜயலட்சுமியார் மாஸ்கோவுக்கு மரச்சாமான்களை, ஸ்விட்சர்லாந்திலிருந்து விமானத்தில் ஏற்றிச் சென்ற வினோதம்—கிருஷ்ண மேனன், 'டஜன்' கணக்கான கார்களை வைத்துக்கொண்டு இஷ்டம்போல் லண்டனில் செலவு செய்த விசித்திரம்—அட்ரசேயில்லாத கம்பெனிக்கு லட்சக் கணக்கில் பணம் கொடுத்து ஏமாந்த அதிசயம்—உபயோகமில்லாத 'ரெடிமேடு' வீடுகளை வாங்கிப் பணத்தைக் கரியாக்கிய மோசடி—ஜீப்கார் ஊழல்—இப்படி விதவிதமான, வினோதங்கள், ஒவ்வொராண்டும் தெரிவிக்கப் படுவதுபோல இந்த ஆண்டும் அந்த இலாகா வெளியிட்டிருக்கிறது.

தேவையில்லாத விஷயங்களுக்கு பணம் தேவையென்று கேட்டு 17 தடவைகள் பணம் கோரினவாம்—டில்லி மந்திரி சபைகள்.

ஒவ்வொரு மந்திரி இலாகாவிலும் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள், நஷ்டங்கள் மூலம் சர்க்கார் கஜானாவுக்கு ஏற்பட்ட மொத்த நஷ்டம் ரூ 31 லட்சமாம்.

இப்படி விபரங்களைத் தந்துள்ளது! லண்டனிலிருக்கும் தூதுவர் ஆலயம்—விஜயலட்சுமியார்தான் பொறுப்பாளி—இஷ்டம் போல் ஒரு கம்பெனியிடமிருந்து, மரச்சாமான்களை வாங்கியதாம், கடந்த ஆண்டில்! ஒரு வெளிநாட்டுக் காரியாலயம், பொய்ச் 'செக்' கொடுத்து பணம் வாங்கியிருக்கிறதாம். மத்ய சர்க்காரிலுள்ள 'டிராக்டர்' சம்பந்தமான ஸ்தாபனம், அவசியமில்லாத 'ரிப்பேர்' செலவுகளையும் கணக்குக் காட்டுகிறதாம். தொழிலாளர் மந்திரிசபை, தனக்கேற்பட்ட ஒரு வழக்குக்கு ஒருநாளைக்கு 1750 ரூபாய் கொடுத்து 'ஸ்பெஷல்' வக்கீல் வைத்து நடத்திற்றாம்! சர்க்காருக்கென வக்கீலிருக்கும் போதே, இது!!—இப்படியெல்லாம், இருக்கிறதாம், ஊழல் போக்கு. இந்த ஆண்டு, தணிக்கை இலாகாவின் கண்ணுக்கு எட்டிய, தகவல்கள் இவை!!

*

"இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா? எவ்வளவோ பெரிய பிரம்மாண்டமான காரியங்களைச் செய்யும்போது, இப்படிப்பட்ட சில்லரைச் சம்பவங்கள் ஏற்படத்தான் நேரும். நாளைக்கு ஏற்படப்போகும் நன்மைகளைப் பற்றி எண்ணுங்கள். பாலைவனம் சோலைவனம் ஆகப்போகிறது! பல திட்டங்கள், நிறைவேறி வருகின்றன!!" என்று நமக்குப் பதிலளிக்கக் கிளம்புகிறார்கள், தேசிய நண்பர்கள். பெரிய காரியங்களை மேற்கொள்ளும்போது சிறுதவறுகள் ஏற்படாமலே, ஆட்சி செய்த வெள்ளையன் ஒருபக்கம், கிடக்கட்டும்—புதிதாக ஆட்சி பீடம் ஏறியவர்கள் என்பதால் அப்படி தவறுகள் சில ஏற்பட நேரும் என்பதைக்கூட ஏற்றுக்கொள்வோம்.

ஆனால், இந்தத் தவறுகள் ஒரு முறை இரு முறையோடு நின்று விடவில்லை! தொடர்ந்து, ஏற்பட்டு வருகிறது! ஆமாம், தொடர்ந்து! ஏழாண்டுகளாக!!—அதனால் தான், நாம் கவலைப்படுகிறோம்,

இதோ, ஒரு செய்தி! பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள், செலவழிக்கப்படும் தொகையோ கோடிகோடி ரூபாய்கள், பாக்ராநங்கல், தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு, ஹிராகுட், கோசி, சாம்பல், ரிஹந்த் முதலிய ஆறு திட்டங்களுக்கு எவ்வளவு பணம் செலவழியும் என்பதை அடிக்கடி டில்லி, கணக்குப்போட்டு வருகிறது! இதுவரை, ஏழு தடவைகள், இவ்வளவுதான் செலவாகுமென திட்ட நிபுணர்களும் மந்திரிமார்களுமாக உட்கார்ந்து புள்ளி விபரத்தோடு போட்டுப் பார்த்தார்களாம்!! எனினும், இப்போது என்ன செய்தி வருகிறது, தெரியுமா? போட்ட கணக்கைவிட **150 கோடி** ரூபாய்கள் இந்த ஆண்டுக்கு அதிகமாகச் செலவழிக்கப்படவேண்டும்! 'பத்ம விபூஷணங்கள்,' பணியாற்றும் திட்டங்கள் இவை—பெரிய 'மூளை'களின் திறமையால் உருவாக்கப்படும் திட்டங்கள்—வரவு செலவோ, வகையில்லாமல் வளர்கிறது! குறையவில்லை—கவனம், கவனம்!—வளர்ந்துகொண்டே போகிறது.

எனினும் சொல்லுகிறார்கள்.

ஒரு கேள்வி!

—(::)—

"அண்ணா!"

"தம்பி!"

"அமெரிக்காவரைக்கும் யோசனைகள் சொல்லுகிறாரே ஆச்சாரியார்......"

"ஆமாம், தம்பி!"

*

"அண்மையில், டில்லி பார்லிமெண்டில் ஒரு மசோதா, தீவிர எதிர்ப்புக்களுக்கு இடையே சட்டமாயிற்றே, அண்ணா!"

"ஆமாம், தம்பி! இந்துச் சட்டத்திருத்த மசோதா என்று பெயர் அதற்கு......"

"அந்த மசோதாவில் என்ன இருந்தது..."

"பெண்களுக்கு சொத்துரிமை திருமண விலக்குஉரிமை முதலிய அம்சங்கள் இருந்தன..."

"இதற்கா, எதிர்ப்பு?"

"ஆமாம்! இந்தச் சட்டம், மனு மாந்தாதிகள் செய்ததில் கைவைக்கிறது என்று கர்ச்சித்தனர், வைதீகர்கள்"

*

"அணுகுண்டுத் தடைக்கு அமெரிக்காவுக்கு ஆலோசனை சொல்லக்கிளம்பும் ஆச்சாரியார், சிறிய திருத்தத்தை எதிர்க்கும் சனாதனிகளுக்குப் புத்திவரும்படி, ஏதாவது அறிக்கைவிட்டாரா அண்ணா!"

"விட்டதாகத் தெரியவில்லை, தம்பி!"

"ஏன், விடவில்லை......"

"......?......?......?"

தேசியத் தோழர்கள், "அதனால் என்ன? திட்டம் முற்றுப்பெற்றால், தேனும் பாலும் ஓடாதோ, நாட்டில்," என்று.

இவர்கள் சொல்லுவதைப் போலவே, தலைப்பில் தந்தோமே அக்கதையில் வந்த மன்னனும் கேட்டானும் அமைச்சனை,

"அமைச்சரே, குதிரைகளுக்குக் கொடுத்த பணம் பாழ் என பழிக்கிறீர் என்னை. முட்டாள்களின் பட்டியலில் முதலிடமும் கொடுத்துள்ளீர். நீர் நினைப்பதுபோல இல்லாமல், நான் நம்பிய வியாபாரிகள், குதிரைகளைக் கொண்டுவந்து கொடுத்தால்........?"

"அப்படி ஒருபோதும் நடவாது, வேந்தே! அப்படி நடைபெற்றுவிட்டால், உடனே உங்கள் பெயரை முட்டாளின் பட்டியலிலிருந்து எடுத்துவிடுகிறேன்" என்றானும், அமைச்சன்.

அந்த அமைச்சன் நிலையிலேயே, உளோம், நாம்! எத்தர்களையும் மிஞ்சி, நாடு நலம்பெற்றால், நமக்கொன்றும் கஷ்டமில்லை—நாவாரப் பாராட்டுகிறோம்—நல்லது செய்தார்கள், என்று சொல்லிவிட்டுப் போகிறோம்.

காங்கிரஸ்காரர்களைப் பழிகூறிக் கொண்டேயிருப்பது அல்ல, நமது இலட்சியம். மூல முழக்கம், நமக்கு வேறு இருக்கிறது.

எனினும், நாம் இவைகளையெல்லாம் அடிக்கடி சுட்டிக்காட்டுவது, இனிமேலாவது இப்படி நடக்காமலிருக்காதா?—எனும், ஆசையால்தான். அந்த ஆசைக்குக் காரணம், அழிவது நாம் செலுத்தும் வரிப்பணம் என்பதால்.

நாம் மட்டுமல்ல, நாட்டு நலனில் அக்கரைகொண்ட ஒவ்வொருவரும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம், இப்படிச் சுட்டிக் காட்டாமலும் இல்லை. எனினும், தொடர்ந்து ஊழல்கள்! அதுவும் ஏழாண்டு காலமாகத் தொடர்ந்து!

இலாகாக்களிலிருந்து மந்திரி சபைவரை, ஊழல்கள்—இது, பெரிய அதிசயம்! எங்குமிலாத அதிசயம்!

ஊழல்களைச் செய்வோரைக் கண்டுபிடிக்கும் திறனில்லை, டில்லிக்கு — மாறாக, பட்டம் தருமளவுக்கு இருக்கிறது.

பழியைப் பண்டித நேருவின்மீது மட்டும் போட விரும்பவில்லை, நாம்—அவரென்ன செய்வார்? மனதில் யாவும் சரிவர நடைபெறவேண்டும் என்கிற ஆசைகூட இருக்கலாம்! ஆனால்......!

இவ்வளவு பெரிய பரந்த துணைகண்டத்தில், ஆங்காங்கும் நடைபெறும் ஒவ்வொரு தகவலையும், சரியா தவறா என்று எடைபோட ஒரு பண்டிதநேரு அல்ல-எத்துணை பேர் இருந்தாலும் முடியாது. இந்தியா, சிறு நாடல்ல; பெரியதோர் துணைகண்டம். இதனை ஆள, பல, ஆட்களையும் நம்பித்தானாகவேண்டும்—அவர்களின் திறனையும் அறிவையும் எடைபோடுவதும் எளிதல்ல.

இப்படி பெரியதோர் பூமியைச் சுமக்கும் பீடமாக டில்லி இருக்கும் வரையில், ஊழல்களும், ஊதாரித் தனங்களும் நடைபெறவே செய்யும். மக்களின் வரிப்பணமும் 'திறமையாளர்'களால் 'சுவாகா' செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கும் தொடர்கதையும் நீடிக்கும்!!

★

ஒரு "உலக ஏடு"

[உடுமலையான்]

அவருக்கு, பத்திரிகைகளும் புத்தகங்களும் படிப்பதிலே ஒரே பைத்தியம். கண்ணில் கண்டால் படித்து முடிக்காமல் கீழே வைக்கும் வழக்கம் இல்லை. உலக நடவடிக்கைகளையும் சமூக வாழ்க்கை முறைகளையும் தெரிந்துகொள்ள எல்லாப் பத்திரிகைகளையும் படித்தால்தான் முடியுமோ என்ற எண்ணம் அவர் மனதில் எழுந்து அலைக்கழித்தது.

மற்ற பல பத்திரிகைகளில் வந்திருக்கும் பயனுள்ள விஷயங்களையெல்லாம் திரட்டி ஒரு பத்திரிகையாக வெளியிட்டால் நன்றாக இருக்குமே என்று முடிவு செய்தார், அந்தப் பிரமுகர். 'வழவழ' என்று தேவையற்ற அளவில் நீண்டு வருகிற கட்டுரைகளும் அந்தக் காரு வாசகர்களுக்கு சலிப்பைத் தந்து கொண்டிருந்த நேரம் அது.

மின்சாரக் கம்பெனியின் விளம்பர இலாகாவில் கிடைத்த வேலையை விட்டுவிட்டு, நியூயார்க் நகரத்திற்கு வந்து, ஒரு மத குருவின் மகளைத் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தை ஆரம்பித்தார் அவர். இந்தத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து இல்லறத்தோடு கையிலிருந்த பணம் போதாமல் கொஞ்சம் கடன் வாங்கிப்போட்டு ஒரு பத்திரிகையும் ஆரம்பித்தார்கள்.

1922 பிப்ரவரி மாதம் இந்தத் தம்பதிகளது பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்தது. "பண்பும் பயனும் உள்ள முப்பத்தொரு கட்டுரைகளை, புகழ்பெற்ற பத்திரிகைகளிலிருந்து எடுத்து குறுகிய அமைப்போடும் அளவோடும் சமைத்துத் தரப்படும் திரட்டு" என்று பொருள் பொதிந்த இலட்சிய வாக்கியத்தோடு இதழ் பிரசுரிக்கப்பட்டது. ஐயாயிரம் பிரதிகள் முதலில் அச்சிடப்பட்டது.

அவர்களுடைய ஜாதகம் பொய்த்துவிட்டது- ஐயாயிரம் சந்தாதாரர்கள் உடனே சேர்ந்தார்கள். தம்பதிகளின் இல்லற இன்பம் இரட்டிப்பாயிற்று. பத்திரிகையும் வாழ்ந்தது.

முதல் வாரம் படோடோப விளம்பரங்களோடு ஆரம்பித்து, மறுவாரம் இரண்டு நாட்கள் கழித்து பிரசுரித்து, மூன்றாம் வாரம் சமாதானம் சொல்லி அறிக்கைவிட்டு அடுத்தவாரம் வருத்தத்தோடு நிறுத்திவிடும் பழக்கம் அதிகமாகிக்கொண்டு வரும் நமது நாட்டில், அடுத்த வருஷமே பல்லாயிரம் பிரதிகள் விலைபோயின என்ற செய்தி வந்தால் ஆச்சர்யமாகத்தான் இருக்கும்.

உலகத்திலுள்ள பத்திரிகை வாசகர்கள் எல்லோரும் அந்தப் பத்திரிகையைப் படித்தே தீரவேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

"ரீடர்ஸ் டைஜஸ்ட்" என்ற மாத இதழின் வளர்ச்சிதான் இப்படிக் காட்சி அளிக்கிறது. 1922 முதல் இதழ் பிரசுரித்து 1000 பிரதிகள் வெளியிட்டு, இன்றைக்கு அறுபது லட்சம் பிரதிகளாக முப்பது நாடுகளில் வியாபித்து வளர்ந்திருக்கும் செய்தி பிரமிக்க வைப்பதாக இருக்கிறது.

மொத்தம் 17 வேற்று நாட்டு மொழிகளிலும் வெளியிடப்படுபடுகிறது. உலகத்திலேயே அதிகமான வாசகர்களைக் கொண்டிருப்பதும், செல்வாக்கு பெற்றிருப்பதும் டைஜஸ்ட் தான். இதை இவ்வளவு பலம் பொருந்திய இதழாக கொண்டுவந்த பெருமை, அதன் ஸ்தாபக ஆசிரியரான டிவிட் வாலஸ் என்பவரையே சேரும். 1889, நவம்பர் 12ல் மின்னசோடா என்ற இடத்தில் பிறந்து, மகலஸ்டர் கல்லூரியிலும் கலிபோன்யா சர்வகலாசாலையிலும் பயின்றார் வால்ஸ். புத்தக வெளியீட்டுக் கம்பெனியில் வேலைக் கமர்ந்தபோதுதான் 'பத்திரிகைப் பூச்சி'யாக மாறினார்.

தன்னந்தனியாக ஓர் பூங்காவில் உட்கார்ந்து கொண்டு பல பத்திரிகைகளை வைத்துச் சிந்தித்தார். மலருக்கு மலர் தாவி தேனைத் திரட்டிச் சேர்க்கிற வண்டு இவர் கண்ணில் பட்டு எண்ணத்தை உண்டாக்கியதுபோலும்! வாசகர்களுக்கு ஒரு திரட்டு ஏன் தரக்கூடாது என்ற கேள்வியை அவரே கேட்டுக்கொண்டார். அடுத்த இரண்டாண்டுகளில் விடையும் தந்துவிட்டார். லைலா பெல் அக்கிஸனை மணந்த பிறகு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

1923ல் ஏழாயிரம் பிரதிகள் விற்பனையானபோதுதான் காரியாலயம் என்ற லட்சணத்தில் ஒரு இடம் அமைத்தார்கள். மாதம் 25 டாலர் வாடகைக்கு இடம் பிடித்தார்கள். 1929ல் இருபத்தொன்பதாயிரம் பிரதிகள் செலவாயின. 1940ல் 2 லட்சத்து ஐம்பதினாயிரம் பிரதிகளாக வளர்ந்தது. இன்றைக்கு அமெரிக்காவில் வெளியிடப்படும் டைஜஸ்ட் மட்டும் மாதா மாதம் ஒன்பது லட்சம் பிரதிகளாகும். பத்திரிகையின் அமைப்பில் வாலஸ் மெதுமெதுவாக மாற்றம் செய்து வந்தார்.

*

ஒரு பத்திரிகை செல்வாக்குடையது என்றால், அதன் வாசகர்கள் பத்திரிகையின் போக்கையும் நோக்கையும் முழுக்க முழுக்க ஆதரிக்கிறார்கள், அதன் வழி எப்பொழுதும் நடக்க சித்தமாயிருக்கிறார்கள், அதில் வரும் விஷயங்களை நம்பி ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுதான் அர்த்தம். உலகத்தில் எல்லா இடங்களிலும் இப்படித்தான். வாசகர்களின் விருப்பு வெறுப்புகளை எடைபோட்டு அறிந்து, அவர்கள் கருத்துக்கு எருவிட்டு வளர்க்கும் விஷயங்களையே பிரசுரித்தால் செல்வாக்கு காரியாலயத்தைத் தேடிக்கொண்டு வரும். இப்படிப் பார்த்தால் டைஜஸ்ட்டில் வரும் விஷயங்களை, அதைப் படிக்கும் அத்தனை வாசகர்களும் அப்படியே நம்புகிறார்கள். பொய்யானவையும் புனைந்துரையும் அதில் வெளிவராது என்ற திடமான எண்ணம் அதன் வாசகர்களிடையே பலப்படும் விதத்தில் தான் அதன் போக்கு இருந்து வருகிறது. உலகத்தில் வேறு எந்தப் பத்திரிகைக்கும் இல்லாத தனிச் சிறப்பு அதுதான். அதனிடம் வாசகர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை எவ்வளவு என்பதற்கு பல சான்றுகள் காட்டமுடியும்.

சோயாபீன்ஸ் உற்பத்தி செய்வதன் முறைகளையும் நன்மைகளையும்பற்றி டைஜஸ்ட்டின் ஸ்பானிஷ் பாஷைப் பதிப்பில் ஒரு சமயம் கட்டுரையொன்று பிரசுரிக்கப்பட்டது. அதைப் படித்த மறுதினமே பீன்ஸ் உற்பத்திக்கான ஏற்பாடுகளை வாசகர்களும் மற்றவர்களும் செய்ய ஆரம்பித்துவிட்டார்களாம். இன்றைக்கு லத்தீன் அமெரிக்காவில் இருக்கும் பீன்ஸ் காடுகள் எல்லாம் இந்தக் கட்டுரையால் ஏற்பட்டவைதான் என்று கூடச் சொல்லலாம்.

கல்வி அறிவு அற்றவர்களுக்கு கல்வி போதிக்கும் புது முறை பற்றிய ஒரு கட்டுரை டைஜஸ்ட்டில் வெளிவந்தவுடன், தென் அமெரிக்காவில் நாடு முழுவதும் அந்த முறையைக் கையாண்டு ஒரு இயக்கமே உருவாகி உழைத்ததாம்.

✶

4-பக்கத் தொடர்ச்சி

நோக்குவீர், தியாகராய நகரை! எதிரி—மண்டியிடுகிறார்; அதுமட்டுமல்ல, நம்முடைய எதிரிகளையும் சாடவருகிறார்.

"இந்தி மொழி முதலில் பள்ளிக்கூடம் சென்று படித்துக்கொண்டு வரவேண்டிய மொழியாம்!"—

சொல்லுகிறார், ஆச்சாரியார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு, ஏற்பட்டிருக்கிறது, இந்தவிவேகம்!! எனினும், ஏற்றுக்கொள்வோம், இப்போதாவது இதனை உரைத்தாரே எனும் மகிழ்ச்சியில்.

இந்தியைப்பற்றி அவர் வழங்கிய முடிவு கண்டதும், முரசொலி எழுப்பும் ஏடுகள், நமக்குத் தெரிகிறார்கள்—இதே, 'தினமணி' ஊர்வலமாகச் சென்ற நமது தோழர்கள் தலையில் ஈயத்தைக் கொட்டிற்று, 1938ல்! இன்று, அதுவும் எழுதுகிறது!!

காங்கிரஸ்காரர்கள்கூட, இன்று குரலைக் கனைத்துக்கொண்டு, "எங்களுக்கும் இந்தியைப் பற்றித் தெரியும்! என்றாலும், தலைவர்களை மீறலாமா, என இருந்தோம். இந்தி நமக்குத் தேவையா, என்பது ஆலோசிக்கவேண்டிய விஷயம் தான்" என்று துணிவோடு சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

காமராஜரே வெளியிடுகிறார், "அவசரப்படுகிறார்கள் வடக்கே இருப்பவர்கள்! அவர்களுக்குப்பதில் தரும்படி செய்வோம்" என்று. அவரது அருகிலிருக்கும் சுப்ரமணியம் —கொஞ்சம் அவசரக்காரர்— அவர்கூட இந்தியை எப்படி இவ்வளவு சீக்கிரம் சர்க்கார் மொழியாக்கமுடியும் எனக் கேட்கிறார்.

இவர்கள்மட்டுமல்ல, கேரளத்தை ஆளும் முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனனும் வெளியிட்டிருக்கிறார், அண்மையில், "வேண்டுமென்றே இந்தி வெறியர்கள் அவசரப்படுகிறார்கள். எப்படி, தெற்கே இருப்பவர்களால் அம்மொழியைக் கற்று எல்லாக் காரியங்களையும் செய்யமுடியும்?" என்பதாக.

இந்த எழுச்சிகளை, மனமார வரவேற்கிறோம். எதிர்பார்த்த எழுச்சி இது — இப்போதுதான் உருவெடுத்திருக்கிறது.

அன்று சொன்னோம் நாம்! இன்று சொல்கிறார்கள் இவர்கள்!!

இந்தி பொதுமொழியாக முடியாது. ஏனென்றால், பொதுவான இந்தியே கிடையாது.

ஒரு இடத்துக்கும் இன்னொரு இடத்துக்கும் இந்தி எவ்வளவோ மாறுபடுகிறது.

தமிழின் இடத்தை இந்தியால் பிடிக்கவும் இயலாது.

இந்தியை முதலில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டும்.

ஒருபோது நாம் என்ன சொன்னோமோ, அதே வாசகங்கள்! அடிபட்டுக்கொண்டே சொன்னோம் நாம். தலைவரையும் தளபதிகளையும் சிறைக்கு அனுப்பிக்கொண்டே செப்பினோம். தாலமுத்துவையும் நடராசனையும் கல்லறைக்குள் அனுப்பிவிட்டு, கண்களில் நீர் வழிய வழியக் கதறினோம். ஏற்க

வில்லை—ஏசினார்கள் — அடித்தார்கள்—பிணமாக்கினார்கள் – அலட்சியம் செய்தார்கள்—ஆண்டுகள் 18 ஆகிவிட்டன. இப்போது சொல்லுகிறார்கள்—அவர்களே சொல்லுகிறார்கள்!

பெரிய வெற்றி இது, நமக்கு—மாற்றாரின் மனம் உண்மையை இப்போதாவது அறிந்துகொண்டுவிட்டது.

நம் இலட்சியம் சக்திவாய்ந்தது. வீண் கூச்சல் போடுபவர்கள் அல்ல நாம் — என்பதைத் தெளிவாக்கும் வெற்றி. திராவிடரியக்கம், வீண் வேலைகளில் ஈடுபடாது — ஈடுபட்டால், அது எடுத்துக்கொண்ட பிரச்னையில் நீதியும் நேர்மையும் இருக்கும் — அதனால் எப்போதும் வெற்றியடைந்தே தீரும் என்கிற உண்மையை உரைக்கும் வெற்றி.

நம் கூற்றை, மாற்றார் கூடாரத்திலிருந்த ஒவ்வொரும் ஆதரிக்கத் தலைப்பட்டுவந்தனர் — சமீபகாலத்தில். ஆயினும், ஆச்சாரியாரும் ஏற்றுக்கொள்கிறார் என்பதே பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். அவர்தான் இந்தியை நுழைத்தவர்—அவரால்தான் இந்திக்கு, இங்கு 'பிரச்சாரசபை'கள்மூலம் நுழையும் துணிவு ஏற்பட்டதும். அவரே, இப்படி வழங்குகிறார், பட்டம்! **இந்தியை முதலில் அனுப்பவேண்டுமாம் பள்ளிக்கூடத்துக்கு** — கிண்டல் தொனிக்கும் வாசகம். ஆனால், எவராலும் மறுக்கமுடியாத உண்மை,

எனவே, இந்திபற்றிய ஆச்சாரியாரின் கருத்தை நாம் வரவேற்கிறோம்—அது, மனத்தூய்மையோடு புறப்பட்ட தீர்ப்பு என்றும் கருதுகிறோம்.

அவரது கருத்தைக் கண்டதும், ஏதோ காரணத்தால் அடக்கி வைத்திருந்த உண்மைகளையெல்லாம் வெளியிட முன்வந்த ஏட்டாளர்களையும் பாராட்டுகிறோம்.

வெறுப்பிலும் துவேஷத்திலும் முடியும்.

தமிழருக்கு அன்னியமான பாஷை.

ஹிந்தி பாஷை முதலில் பரீட்சையில் தேற வேண்டும்.

குழப்பம் உண்டாக்கும் யோசனைகள்.

ஏகபாஷைப் பித்தர்களின் அவசரப் பைத்தியம்.

இவ்வாறெல்லாம், இந்தி மொழியைப் பற்றியும் அதை அரசாங்க மொழியாக்க அவசரப்படுவோரைப் பற்றியும் தீட்டுகிறார், ஆச்சாரியார்.

இந்த விளக்கங்கள் மூலம் தெளிவாகத் தென்படுகிறது — **இந்தி லாயக்கில்லாத மொழி! வடநாட்டார் வற்புறுத்தி நுழைக்கிறார்கள்!** — எனும் உண்மை.

இந்தக் காரணங்கள், நாம்முன்பே சொன்னவை—அதனை இப்போது சொல்லுகிறார், அவர். ஏடுகளும், ஆதரவு முரசுகளை, தட்டுகின்றன.

மொழி ஏகாதிபத்யக்காரர்கள், என்றோம் நாம். ஏகபாஷைப் பித்தர்கள்! அவசரப் பைத்தியங்கள்! — என்கிறார், அவர்.

இந்த உண்மையை, இப்போதாவது அவர் உணர்ந்தாரென்பதாலேயே அகமகிழ்ச்சியடைகிறோம்.

ஆச்சாரியாரின் அறிக்கையில், எப்படி இந்தியை வளமாக்கவேண்டும்—எப்படிச் செய்தால் இந்தியப் பொதுமொழியாக்கலாம் – அவசரப்படுவது, ஆபத்து, -எனும் போதனைகளும் இருக்கின்றன.

அவர் மட்டுமல்ல, டில்லியின் அவசரத்தைக் கண்டிக்க வந்த ஏடுகளிலும் இந்த ஆலோசனைகள் பிரதிபலிக்கின்றன.

அதே நேரத்தில், இந்தியின் இலாயக்கற்ற நிலைமையையும் ஒவ்வொருவரும் குறிப்பிடாமலில்லை. இந்தியை முதலில் அனுப்புங்கள் பள்ளிக்கூடத்துக்கு! — என்கிறார், ஆச்ாரியார்.

பள்ளிக்கூடம் செல்லவேண்டிய பாலகனை, பாராளும் பீடத்தில் அமர்த்தி வேடிக்கை செய்வது, மன்னர்களின் காலத்தில் சகஜமாயிருக்கலாம். இது, மக்கள் காலம். இங்கே மன்னனுக்கும் வேலையில்லை — பாலகனுக்குப் பாராளும் பொறுப்பை அளிக்கும் பைத்யக்காரர்களும் இருக்கமாட்டார்கள்.

ஆயினும், 'அகில இந்திய ஐக்கியத்துக்கு,' தாங்கள் எதிரிகளாகிவிட்டதாகக் காங்கிரஸ் தலைமை கருதுமோ; திராவிடநாடு பிரச்னைக்கு ஆதரவளிப்பதாகப் போய்விடுமோ எனும் அச்சம் மனதைக் குடைவதாலேயே, 'இந்தியை வளர்த்து பிறகு நாமும் அதனைக் கற்றறிவோம்' என்று சொல்லுவதும்.

எப்படிப் பூசி மெழுகினாலும், அவர்தம் இதயத்துக்குள்கிடப்பது என்ன என்பதை நாடு அறிந்துவிட்டது.

இந்தியை எதிர்த்தோம், ஒருபோது—நாம் மட்டும்! அதற்காகத் தியாகமும் செய்தோம்!!

இப்போது, மாற்றாரும், வருகின்றனர்—நமது, பாதைக்கு! அவர்களும், இந்தியின் இலாயக்கற்ற நிலையை எடுத்துச் சொல்லுகிறார்கள்!!

இந்தி சாகிறது! அடிமேல் அடிபட்ட வண்ணம் செத்துக்கொண்டிருக்கிறது!!

நம் குரல், வெல்கிறது; நமது செந்நீரும் கண்ணீரும் வீண்போகவில்லை.

இந்தியை நாம் எதிர்த்தபோது, ஏசிய கூடாரம், இன்று நம்மைவிட தீவிரமாக அது 'இலாயக்கற்ற மொழி' என்பதைக் காட்ட முனைகிறது.

பெரிய வெற்றி, இது! உண்மையான இலட்சியம் எப்போதும் வெற்றிபெறும் என்பதை தெளிவாக்கும் வெற்றி!!

இந்தி உதவாது—என்பதை உணர இவர்களுக்கு 18 ஆண்டுகள் சென்றிருக்கின்றன. அனுதாபப் படவேண்டிய விஷயம் தான்!

ஆண்டுகள் பதினெட்டாயிற்றென்றாலும், கடைசியில், உண்மையின் பக்கம் வந்து நிற்கவேண்டியவர்களாகி இருக்கிறார்கள்,

இந்தக் காட்சி, இப்போது, இந்தி விஷத்தில்! நாம் கூறிவரும் கொள்கையின் விஷயத்திலும் படிப்படியாக இது போன்ற காட்சிகள், என்றாவது ஒரு நாள் உண்டாகியே தீரும்!

அதனை அறிவிக்கும் 'பூபாளம்' ஆச்சாரியாரின், இந்த அறிக்கை.

அந்த வகையில், மகிழ்கிறோம்—கொள்கை வெற்றிபெற்றுவிட்டது! இந்தி சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi St. Kancheepuram